# தீபகச் சுடர்

செப் 2024

தீபம் 13 சுடர் 04

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



ஞானம், பொறுமை, தாழ்ச்சி
இம்மூன்று புண்ணியங்களை கொண்ட

## நல்லாசிரியை அன்னை மரியா!

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**



***அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,***

செப்டம்பர் மாதம் 5ம் தேதி ஆசிரியர் தின விழாவைக் கொண்டாடுகிறோம். அன்னை மரியாள் நல்லாசிரியருக்கான சிறந்த முன் உதாரணமாக திகழ்கின்றாள். செப்டம்பர் 8ம் தேதி நமது ஆரோக்கிய அன்னை திருவிழா மற்றும் நம் அன்னை மரியாளின் பிறந்த நாளினைக் கொண்டாட இருக்கின்றோம். இவ்விரு விழாக்களும் நமக்கு ஒரு உண்மையை விளக்குகின்றது. அதாவது மரியாள் இயேசுவின் தாய். ஒரு நல்ல தாயாக இருக்க மட்டுமல்ல, மாறாக ஒரு நல்ல ஆசிரியராகவும் இருந்து நமக்கு ஒரு முன் உதாரணமாக திகழ்கின்றார். ஒரு நல்ல ஆசிரியருக்கு இருக்க வேண்டிய உயரிய ஞானம், கடல்போன்ற பொறுமை, எல்லையில்லா தாழ்ச்சியுடன் கூடிய பணிவாழ்வு இம்மூன்றும் நமது அன்னை மரியாளிடம் இருந்தது. குறிப்பாக இயேசுவை இவ்வுலகிற்கு பணிசெய்ய அவருக்குக் கற்றுக்கொடுத்த பாடங்கள் அவரின் பணிவாழ்வில் சிறப்பாக பணியாற்ற உதவி செய்தது.

**ஞானம்:** கபிரியேல் அதிதூதரிடம் மரியாள் "இது எப்படி நிகழும்" (லூக். 1:39) என்ற கேள்வி, ஒரு நிகழ்வு நடக்க முடியாது என்று தெரிந்தும், அதாவது தான் கடவுளின் தாயாக வேண்டும் என்பது, திருமணமாகாத ஒருவரால் முடியாதென்று தெரிந்தும் அதைப்பற்றி ஆழ்ந்து அறிய அவள் கேட்ட கேள்வி, மரியாள் ஞானத்தின் இருப்பிடம் என்பதற்கு ஓர் சிறந்த உதாரணமாகும். ஒரு நல்லாசிரியர், கேள்வி கேட்பதும், புரிந்துக்கொள்வதும், ஏற்றுக்கொள்வதும், கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிவதும் ஆசிரியருக்குரிய சிறந்த பண்புகளாகும். இப்பண்புகளை அன்னை மரியாளிடம் நாம் கற்றுக் கொள்வோம்.

**பொறுமை:** மரியாள் தன் வாழ்நாள் முழுவதும் அளவுகடந்த பொறுமையைக் கடைப் பிடித்தாள். இயேசு தான் பொதுவாழ்வைத் தொடங்கும்வரை அன்னை மரியாள் அவருக்கு நல்ல பண்புகளை ஊட்டி வளர்த்தார். ஆசிரியர்கள் மாணவர்களை பக்குவமான மாணவர்களாக உருவாக்கி வாழ்வில் அவர்களை உயர்ந்த நிலைக்கு மாற்ற வேண்டும்.

**தாழ்ச்சியுடன் கூடிய பணிவாழ்வு:** "இதோ ஆண்டவரின் அடிமை" (லூக். 1: 38) என்கிற அவரின் கீழ்ப்படிதல் கடவுளின் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல், பணி செய்தல் என்பவை மரியாளின் வாழ்வில் சிறந்து விளங்கிய புண்ணியமாகும். எது நடந்தாலும் அது ஆண்டவருக்கு பெருமை என்கின்ற அவரது வாழ்வு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஆசிரியர்கள் தாழ்ச்சியுடன் கூடிய கீழ்ப்படிதலை சிறந்த புண்ணியமாக கருதி வாழ்ந்து காட்ட வேண்டும். ஆசிரியர் பணி என்பது பணிபுரிய கடவுளால் கொடுக்கப்பட்ட சிறந்த அழைத்தல். இப்பணியில் மாணவர்களை மையப்படுத்தி கல்வி பணியாற்றி சிறந்ததொரு எதிர்காலத்தை உருவாக்குவது ஆசிரியரின் கடமையாகும்.

நாம் கொண்டாடும் வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா திருவிழா ஆசிரியர்களுக்கு ஒரு நல்ல பாடம் புகட்டுவதாகவும், ஆறுதல் அளிப்பதாகவும் இருக்க, நம் அன்னை ஒரு முன்மாதிரியாக விளங்குகிறாள். கல்வி ஒருவருக்கு ஆரோக்கியமான வாழ்வைப் பெற்றுத்தர வேண்டும். தான் ஆரோக்கியமாக வாழ்ந்து பிறரையும் ஆரோக்கியமாக வாழ வழி செய்ய வேண்டும். உடல் ஆரோக்கியம் மட்டுமல்லாது, உள்ளத்திலும் ஆரோக்கியம் பெற்று வாழ வேண்டும். ஆரோக்கிய அன்னையின் முன்மாதிரியைப் பின்பற்றி ஆசிரியர்கள் மாணவர்களை ஆற்றுப்படுத்தி, ஊக்கப்படுத்தி, தேற்றி, நம்பிக்கையை ஊட்டி வழிநடத்த வேண்டும். அன்னை மரியாள் இயேசுவின் தாயாக இருப்பதைப்போல, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தாயாக இருக்க அழைக்கப்பட்டுள்ளனர். ஞானம், பொறுமை, தாழ்ச்சி இம்மூன்று புண்ணியங்கள் வழியாக இயேசுவைப்போன்ற நல்ல மனிதர்களை உருவாக்க ஆரோக்கிய அன்னையின் பெயரால் நம் ஆசிரியர்களை வாழ்த்துவோம்.

என்றும் அன்புடன்

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச

இயக்குநர் - தீபகம்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


01.09.2024 பொதுக்காலம் 22ம் ஞாயிறு - திருப்பலி 02

03.09.2024 புனித பெரிய கிரகோரி - திருப்பலி 03

05.09.2024 கொல்கொத்தா நகர் புனித தெரேசா - திருப்பலி 04

08.09.2024 பொதுக்காலம் 23ம் ஞாயிறு (கன்னி மரியாவின் பிறந்த நாள் பெருவிழா) - திருப்பலி 05

12.09.2024 மரியாவின் தூய்மைமிகு பெயர் விழா - திருப்பலி 06

14.09.2024 சிலுவையின் மாட்சி விழா - திருப்பலி 07

15.09.2024 பொதுக்காலம் 24ம் ஞாயிறு - திருப்பலி 09

17.09.2024 புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர் - திருப்பலி 10

21.09.2024 புனித மத்தேயு திருத்தூதர் விழா - திருப்பலி 11

22.09.2024 பொதுக்காலம் 25ம் ஞாயிறு மற்றும் அரு.ஜோசப் கலசான்ஸ் மார்க்ஸ் - திருப்பலி 13

23.09.2024 புனித பியோ அருள்பணியாளர் - திருப்பலி 14

27.09.2024 புனித விசென்ட் தெ பால் - திருப்பலி 15

29.09.2024 பொதுக்காலம் 26ம் ஞாயிறு - திருப்பலி 16

30.09.2024 புனித ஜெரோம் அருள்பணியாளர் - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


புனித அன்னை தெரசா - வாழ்வு தரும் பாடம் 19

புனித பியோவின் புனித வாழ்வை அறிவோம் 22

அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மார்க்ஸ் அருளாளரான வரலாறு 24

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.09.2024 பொதுக்காலம் 22ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜான் அலெக்ஸ்

I. இ.ச. 4: 1-2, 6-8 II. யாக். 1: 17-18, 21-22, 27 மாற்கு 7: 1-8, 14-15, 21-23

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, பொதுக்காலம் 22-ஆம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம். இன்றைய வழிபாட்டு வாசகங்கள் அனைத்தும், கடவுளின் கட்டளைகளை பற்றியும், மனிதன் தானே உருவாக்கிய மரபுகளை பற்றியும், நம் வழிபாடு எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும் என்பதை பற்றியும் நம்மை சிந்திக்க அழைக்கின்றது. கடவுளின் கட்டளைகள் அனைத்தும் வாழ்வு தருபவை, மனிதனிடம் இருந்து, மாற்றங்களை எதிரப்பார்ப்பவை, நம் உள்ளத்தை மகிழ்விப்பவை. ஆனால் மனிதன், கடவுள் உருவாக்கிய சட்டங்களை சடங்குகளாக மாற்றி, கட்டாயத்தின் பெயரில் கட்டிப் போட்டு, பிறரை அடிமையாக்கி, வாழ்வையே சீரழித்து, பிறர் மனதினையும் கறைபடுத்தியுள்ளான் என்று இன்றைய நற்செய்தியில் இயேசு நமக்கு எச்சரிக்கை விடுக்கின்றார். ஆண்டவர் ஒருவரே நலன்களுக்கெல்லாம் ஊற்று, நம் உள்ளத்தில் உறைபவரும் அவரே, நம்மிடமிருந்து நல்லதை எதிர்பார்ப்பவரும் அவரே. பல்வேறு செபவழிபாடுகள், பக்த சபைகள், தினசரி திருப்பலி, ஜெபமாலை என்று உதட்டளவிலும் வெறும் வெளிவேடத்திலும் நாம் கடவுளின் கட்டளைகளை நுணுக்கமாக கடைபிடிப்பது வீண்தான். உள்ளத்தின் தீமைகளை வென்று, உண்மையிலும் ஆவியிலும் கடவுளை வழிபடும்போது, கடவுளின் கட்டளைகள் மனித மரபினையும் தாண்டி நம்மை வாழவைக்கும். பெயரளவில் பெருமை சேர்க்கும் மனித மரபுகளை களைந்து, உள்ளத்தில் உண்மை அன்புடன் கடவுளின் கட்டளைகளை கடைபிடிப்போம். உள்ளத்தில் இறைவனுடன் ஒன்றிணைவோம். நம்மை தீட்டுப்படுத்தும் தீய எண்ணங்களை வென்றிட வரம் கேட்டு திருப்பலியில் இணைந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. வார்த்தைவழி எம்மை வாழ வைப்பவரே, இறைவார்த்தையை அறிவிக்கும் அழைப்பு பெற்ற எம் குருக்களும், கன்னியர்களும் வெறும் பேச்சளவில் மட்டும் இறைவார்த்தையை அறிவிக்காமல் செயல்களின் வழியாக தான் போதிப்பதை செயல்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எங்களை நல்வழிபடுத்துபவரே எம் இறைவா, எங்கள் வாழ்வை வளப்படுத்தும் உமது சட்டங்களையும், கட்டளைகளையும் நுணுக்கமாக கடைபிடித்து எங்கள் வாழ்வில் மாற்றங்களை கண்டு உமதருளை பெற்று மகிழ வரம் தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வாக்கு மாறாத எம் தெய்வமே, அரசியல் மாற்றங்கள், காலநிலை மாற்றங்கள், இயற்கை சீற்றங்கள், புதிது புதிதாக உருவெடுக்கும் நோய்கள் இவற்றால் தினம் தினம் அல்லலுறும் எம் மக்களின் போராட்டங்களில் மனதிடம் தந்து, நோய் நீக்கி, வாழ்வளித்து பாதுகாத்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அனைவரையும் ஆதரிக்கும் எம் ஆண்டவரே, ஒவ்வொரு நாளும் உயிரோடு போராடிக் கொண்டும், தனிமையிலும், வறுமையிலும் தத்தளிக்கும் அனைவரையும் உமது பேரிரக்கத்தால் காத்து ஆதரவளித்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## 03.09.2024 புனித பெரிய கிரகோரி திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இன்று திருஅவை புனித பெரிய கிரகோரி அவர்களின் திருவிழாவைக் கொண்டாடி மகிழ்கிறது. இவர் கி.பி. 540ல் உரோமையில் பிறந்தார். புனிதரின் பெற்றோர்கள் இவருக்கு நல்லதொரு கல்வியை அளித்தனர். 30 வயது நடக்கும்பொழுது "உரோமை நகர்க் காவலர்" என்ற பதவியிலிருந்தார். 5 ஆண்டுகளுக்குப்பின் இப்பதவியிலிருந்து விலகினார். சிசிலியில் பல இடங்களில் துறவற மடங்களை நிறுவினார். தானும் உரோமையில் பெனடிக்ட் சபைத் துறவியானார். குருவான பின்பு திருத்தந்தையின் தூதுவராகப் பணியாற்றினார். தனது 50வது வயதில் திருத்தந்தையாக மக்களாலும் குருக்களாலும் ஒரேமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். நிர்வாகத்தில் உறுதியானவர், நேர்மையானவர், தகுதியற்ற குருக்களைப் பணியிலிருந்து நீக்கினார், சிறைப்பட்டவர்களை மீட்டார், கொள்ளை நோய் ஏற்பட்டபோது நோய்நீங்க மக்களோடு சேர்ந்து இறைவனிடம் மன்றாடினார். தாம் கையெழுத்திடும் போதெல்லாம் "இறைவனின் ஊழியர்களிலெல்லாம் (கடை) ஊழியன்" என்று சேர்த்துக் கொள்வாராம். இவர் கி.பி. 604ம் ஆண்டு மார்ச் 12ம் நாள் இறைப்பதம் சேர்ந்தார். ஞானத்திலும், கல்வியிலும் சிறந்தோங்கிய திருத்தந்தை பெரிய கிரகோரியை ஆசிரியர்களின் பாதுகாவலராக திருஅவை அறிவித்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 3ம் நாள் புனித கிரகோரியின் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இப்புனிதரைப் போன்று நல்ல ஆசிரியர்களாக பணிபுரிய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. கருணைக் கடலே எம் இறைவா, திருஅவையின் தலைவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் ஒவ்வொருவரும் உமது ஞானத்திலும், இரக்கத்திலும், பக்தியிலும் சிறந்து அற்புதங்களை செய்து மக்களின் மத்தியில் இறையசைக் கட்டியெழுப்பும் தூண்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நல்ல ஆசிரியரே எம் இறைவா, ஒரு நல்ல ஆசிரியருக்கு இருக்க வேண்டிய உயரிய ஞானம், கடல்போன்ற பொறுமை, எல்லையில்லா தாழ்ச்சியுடன் கூடிய பணிவாழ்வு இம்மூன்றும் நமது அன்னை மரியாளிடம் இருந்ததுபோன்று எம் ஆசிரியர்களும் பெற்று, மாணவ மாணவிகளை நல்லொழுக்கத்தில் வழிநடத்தத் தேவையான அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் என்றவரே, உலகிலுள்ள அனைத்து குழந்தைகளையும், மாணவ மாணவிகளையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் வாழ்வை உமக்கேற்றபாதையில் ஈடுபடுத்திக்கொள்ளவும், வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்ற பிள்ளைகளாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 05.09.2024 கொல்கொத்தா நகர் புனித தெரேசா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, அன்னை என்றால் அன்பு, அரவணைப்பு, தியாகம், கருணை உள்ளம் என்று பொருள். ஒரு பெண்ணாகப் பிறந்து பல நூறு குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும், அனாதைகளுக்கும், முதியோர்களுக்கும் தாயாக இத்தரணியில் வாழ்ந்து மரித்தவர் அன்னை தெரசா. இவர். 1910 ஆகஸ்டு 26ம் நாள் உங்குபில் உள்ள ஒட்டோமான் பேரரசில் இப்பொழுது வடக்கு மாசிடோனியாவில் பிறந்தார். ஆக்னஸ் கொன்சா போஜா என்று பெயர் சூட்டப்பட்டது. வளரும்பொழுதே பிறர் பணியில் நாட்டங்கொண்டவராய் வாழ்ந்தார். தனது 18வது வயதில் அவர் வீட்டைவிட்டு வெளியேறி லொரேட்டா சகோதரிகளின் சபையில் மறைப்பணியாளராகத் தன்னை இணைத்துக் கொண்டார். 1931 மே அன்று தன் முதல் வார்த்தைப்பாட்டின்போது தன் இயற்பெயரை லிசியே நகரின் தெரசாவின் பெயரால் ஈர்க்கப்பட்டு மாற்றிக் கொண்டார். லொரேட்டா துறவற சபையினை விட்டு வெளியேறி 1948ல் ஏழைகளுடனான தனது சேவையை ஆரம்பித்தார்.

1950 அக்டோபர் 7ம் தேதி பிறர் அன்பின் பணியாளர் சபையை கத்தோலிக்க திருஅவையின் அனுமதியுடன் தொடங்கினார். 13 உறுப்பினர்களை கொண்டு சிறியதொரு அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இவரது இறைப்பணி 600க்கும் மேற்பட்ட அருட்சகோதரிகளால் பல்வேறு நலவாழ்வு மையங்களை கொண்ட தொண்டு நிறுவனங்களாக தழைத்தோங்கி பணி செய்யப்பட்டு வருகின்றது. மத். 25: 42,43ல் உள்ள வார்த்தையின்படி பசியிலும் மூப்பிலும், வறுமையிலும் உள்ளவர்களில் இறைவனைக் கண்டு அவருக்கே பணிப்புரிவதாக தன்னையே ஒப்புக்கொடுத்தார். அன்னை செப்டம்பர் மாதம் 5ம் நாள் 1997ல் இறைவனடிச் சேர்ந்தார். வாழ்வின் விளிம்பிற்கு தள்ளப்பட்டவர்களின் சிரிப்பில் இறைவனைக் காணலாம். "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, பிறர் மனதில் வாழும் வரை" என்னும் அன்னைத் தெரசாவின் பொன்மொழிக்கேற்ப வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வாழ்வளிக்கும் வள்ளலே எம் இறைவா, எம் ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் அன்பு, கருணை, மனிதநேயம் என்ற வார்த்தைகளுக்கு இலக்கணமாக வாழ தேவையான அனைத்து அருட்கொடைகளையும் நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, நாங்கள் ஒருவரையொருவர் சகோதரத்துவ உணர்வுடன் அன்புச் செய்து வாழ்ந்திடவும், பிறருக்கு உதவும் நல்லுள்ளம் கொண்ட மனதைத் தந்து, பிறரின் வாழ்வில் மகிழ்வினை ஏற்படுத்த வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் கடலே எம் இறைவா, அரசியல் தலைவர்கள் தங்கள் பதவியின் பொறுப்புகளை உணர்ந்தால் ஏழை என்னும் வார்த்தைக் காணாமல் போகும். நீர்தாமே இவர்களை தங்களின் கடமை, பொறுப்புணர்ந்து வாழச் செய்தருளுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

## 08.09.2024 பொதுக்காலம் 23ம் ஞாயிறு (கன்னி மரியாவின் பிறந்த நாள் பெருவிழா) திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. எசா. 35: 4-7 II. யாக். 2: 1-5 மாற்கு 7: 31-37

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று அன்னை மரியாவின் பிறப்பு விழாவினைக் கொண்டாடுகின்றோம். அன்னை மரியாள் அமல உற்பவியாக சென்மப் பாவமில்லாமல் அன்னம்மாள் சுவக்கினிடத்தில் பிறந்தார் என்று திருவிவிலியம் கூறுகிறது. ஆதாம் ஏவாளிடமிருந்து வழிவழியாய் வரக் கூடிய சென்மப்பாவத்திலிருந்து விலக்கு பெற்றவளாக கடவுள் அவரை உருவாக்கினார். கிறிஸ்துவின் முன்னறிந்த பாடுகளின் பேறுபலன்கள் வழியாக இந்த சிறப்பு பேற்றினைத் தந்தார். அன்னை பிறந்தவுடன் விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு மூவொரு இறைவன் "இவரே மீட்பரின் தாய்" என்று வானவர்களுக்கு அறிமுகம் செய்தார். வானவர்கள் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தனர். அவர்கள் அன்னையை வணங்கவும், பணிவிடை புரியவும் திட்டம் வகுத்தார். அன்னையின் பிறப்பை அறிந்த அலகைக் கூட்டம் நம்மை அழிக்க ஓர் உயிர் மண்ணுலகில் பிறந்துள்ளது, அவள் வித்து நம்மை அழித்துவிடும் என்று வேதனையுற்றது.

மீட்பராம் இயேசுவின் விலையேரப்பெற்ற இரத்தம் எல்லாம் பாவங்களையும் கழுவி தூய்மையாக்குகிறது. எந்த இயல்பில் மனிதன் கேடுற்றானோ அந்த இயல்பிலேயே இயேசு பரிகாரம் செய்யவிருந்தார். ஆகவே மனுவுரு எடுக்கப்போகும் வார்த்தையான கடவுளுக்கு தூய உடலையும் தூய இரத்தத்தையும் அன்னை மரியாவிடம் இருந்துதான் பெற வேண்டும். இதுதான் மீட்பின் திட்டம் அதனால்தான்

மரியாவை ஜென்மப்பாவம் இல்லாமலும், அருள் நிறைந்தவளாகவும் கடவுள் உருவாக்கினார். இம்மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாள் முழுமையாக கடவுளுக்கு தன்னையே அர்ப்பணித்தாள். அவளது பிறப்பு விண்ணிலும், மண்ணிலும் உயரிய பிறப்பாக கொண்டாடப்படுகிறது. எபே. 1: 4-6ல் உள்ளபடி உலகம் உருவாகுமுன்பே உங்களையும் என்னையும் கிறிஸ்துவுக்குள் தேர்ந்துக்கொண்ட கடவுள், மீட்புத் திட்டத்தில் அன்னை மரியாளும் கடவுளின் இதயத்தில் இருந்தார் என்பது திண்ணமன்றோ. ஏற்ற வேளையில் அன்னையை தம் மகனுக்காக இவ்வுலகில் பிறக்கச் செய்தார். அவர்மூலம் தொடங்கிய மீட்பு நம்மில் நிறைவடைய அருள்வேண்டி இப்பலியை உருக்கமுடன் ஒப்புக்கொடுத்து வானவர்களுடன் நாமும் மகிழ்ந்திட மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் யாவரும் இறைவனின் மீட்புத்திட்டத்தை நன்கு புரிந்து கொள்ளவும். அன்னையைப்போல் உலக மீட்புக்காக உண்மையாய் உழைக்கும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. நாட்டையாளும் தலைவர்கள் தங்கள் அதிகாரத்தையும் ஆட்சிப்பொறுப்பையும் தவறாக பயன்படுத்தாமல், இறையாண்மைக்கு பயந்து நீதி நேர்மையோடு மக்களையாண்டு நடத்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்னையின் பிறப்பு விழாவில் மகிழ்ந்திருக்கும் நாங்கள் அந்த தாய்க்கு கலக்கம் விளைவிக்காத நல்ல பிள்ளைகளாய் எங்களுக்கு கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ அழைப்பை புனிதமாக கருதி வாழும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. விண்ணும் மண்ணும் அக்களிக்கும் இந்நாளில், துன்புறுவோர் ஏழைகள், விதவைகள், நோயுற்றோர், சிறையிலும், தனிமையிலும் தவிப்போர், பசித்திருப்போர் அனைவருக்கும் வாழ்வில் நன்மைகள் பெருகி வளம்பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 12.09.2024 மரியாவின் தூய்மைமிகு பெயர் விழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

இறை இயேசுவின் தாயை நமக்குத் தாயாக நாம் பெற்றது பெரும் பேறு. அந்த தாயின் தூய்மை மிகு பெயரின் விழாவை பேருவகையோடு கொண்டாடி மகிழ திரு அவையின் மக்களாகிய நாம் அனைவரும் இணைந்து வந்திருக்கின்றோம். அனைவரையும் அன்புடன் அன்னையின் திரு தூய்மைமிகு பெயரால் வாழ்த்தி வரவேற்கிறேன். தூங்கா நகரமாம் மதுரைக்கு செல்பவர்கள் அந்நகரை அழகு செய்யும் தெற்கு வாசல் சாலையில் இருபெரும் எழில்மிகு ஊசிமுனை கோபுரங்களை கொண்ட பேராலயத்தை காணாமல் செல்ல இயலாது. இலட்சக்கணக்கான மக்கள் தினமும் பார்வையை உயர்த்திப் பார்த்து என்றும் எவரும் மறந்துவிட இயலா நிலையில் நடு கோபுரத்தில் "மரியே

வாழ்க" என்ற பொறிக்கப்பட்ட எழுத்துகளை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அள்ளிப் பருகிச் செல்கின்றனர். அதனை வாசிப்பவர்கள் மனதில் அச்சாணியாக பதிந்து விடுகிறது. அன்னை மரியின் திருப் பெயர் எத்தனை வியப்புக்குரியது, ஆச்சரியமானது, பெருமைக்குரியது, ஆபத்தில் அருமருந்தாக உதவுகிறது என்பதனை புனித அல்போன்ஸ் லிகோரியார் எழுதிய "மரியின் மாண்பு" என்ற நூலில் அறியலாம். மரியன்னையின் மைந்தர் எனப்படும் புனித ஜெர்மானுஸ் எனது வாழ்வின் இறுதி வார்த்தைகளாக மரியின் பெயரை உச்சரிக்கும் வரம் வேண்டுமென மன்றாடுகிறார். மரியன்னையின் பெயரை யார் உச்சரித்தாலும் அலகை மிரண்டு ஓடுகின்றன என புனித பிரிஜித்ம்மாள் கண்ட காட்சியை கூறியுள்ளார். இதைவிட ஒருபடி மேலே போய் அன்னையின் பெயர் எனதுள்ளத்தில் மீட்புத் தைலமாக இறங்குகிறது என்கிறார். பெரிய பெரிய புனிதர்களை உருவாக்கும் பணி உலகின் இறுதிவரை மரியன்னைக்கு உண்டு. இது அவருக்கே உரித்தானது என புனித மான் போர்ட் அடிக்கடி கூறியுள்ளார். ஆகவே இவ்விழாவினை கொண்டாடும் நாமும் அவரது பெயரைச் சொல்லி சொல்லி வாழ்த்தி துன்பத்தை தூரப்படுத்தி இன்பமாய் வாழ்வோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருஅவை மரியன்னையின் வாய்மை தூய்மை வல்லமை பெற்று அவரது திருப் பெயரை அனுதினமும் உச்சரித்து வாழ்த்தி அலகையின் செயல்களை புறந்தள்ளி நன்மைத் தனத்தால் நிறைந்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைத் திட்டம் நிறைவேற அன்னையை தேர்ந்தவரே இவ்வுலகில் வாழும் அனைத்து மக்களும் மரியன்னையின் மக்களாக மாற வேண்டும். அப்போதுதான் இறை இயேசு செய்த அனைத்து செயல்களையும் அன்பு கொண்டு செய்ய இயலும். நாங்கள் கேட்கும் இந்த வரங்களை எமக்களித்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. பெண்மையை போற்றிய இறைவா, அன்னையின் பிறந்த நாளை கொண்டாடி மகிழ்ந்த நாங்கள், பெண்களை உம் அன்னையைப் போன்று மதிக்கவும், அன்பு செய்யவும், தேவையான அனைத்து வரங்களையும் அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

## 14.09.2024 சிலுவையின் மாட்சி விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

I. எண். 21: 4-9 II. பிலிப். 2: 6-11 யோவா. 3: 13-17

இயேசு கிறிஸ்துவின் இனிய திருக்குலமே, இன்றைய தினம் நாம் திருச்சிலுவையின் மாட்சியை (மகிமை) கொண்டாடுகின்றோம். அக்காலத்தில் யூதர்களுக்கு "சிலுவைமரம்" தடைக்கல்லாகவும், புறவினத்தாருக்கு மடமையாகவும் இருந்தது (1கொரி.1:23). ஆனால் ஆண்டவர் இயேசு தன்னுடைய பாடுகள் மற்றும் உயிர்ப்பின் வழியாக

அதனை வெற்றியின் சின்னமாக மாற்றினார். திருச்சிலுவையை தன் கரங்களில் ஏந்தி, அதில் மரித்து "திருச்சிலுவை" என்ற மாட்சியை ஏற்படுத்தி விட்டார். யூதர்கள் திருச்சிலுவையை மறைத்துவிட எண்ணினார்கள். அச்சமயம் உரோமையில் கான்ஸ்டான்டி நோபுவுக்கும் மாக்ஜெஸ்டியுக்கும் இடையே நடந்த கலவரத்தில் "கான்ஸ்டான்டி நோபிள்" தான் ஆட்சியமைக்க கிறிஸ்தவர்களின் செபஉதவியை நாடினான். திருச்சிலுவை அடையாளம் வானத்தில் தோன்றி அவன் ஆட்சியமைக்க வெற்றியை கொடுத்தது. மன்னன் கிறிஸ்துவமதத்தை அரசாங்க மதமாக கொண்டாடினான். மன்னனின் அன்னை புனித எலென் அம்மாள் 322ம் ஆண்டு திருச்சிலுவையை கண்டுப்பிடித்தார். அவ்வேளை பாரசீக மன்னன் நாட்டின்மீது படையெடுத்து விலையுயர்ந்த செல்வங்களோடு திருச்சிலுவையையும் கவர்ந்து சென்றான்.

ஆனால் பேரரசர் "எரோக்ளியுஸ்" திருச்சிலுவையை மீட்டு விலையுயர்ந்த கற்களாலான ஆடை ஆபரணங்களை அணிந்து கல்வாரிக்கு செல்ல முயன்றும், திருச்சிலுவையை பதிக்க முயன்றும் அவரால் கல்வாரிக்குள் நுழைய முடியவில்லை. அரசரின் நிலைக்கண்டு எருசலேமின் ஆயரான "சக்கரியாஸ்" அவரிடம் கூறியது, "இயேசு சிலுவையை சுமந்து சென்றபோது இவ்வாறு ஆடை அணியவில்லையே" என்றார். தன் தவற்றை உணர்ந்து, எல்லாவற்றையும் களைந்து எளிய தவஉடைகளை அணிந்துச்சென்று கல்வாரியில் திருச்சிலுவையை நிறுவினார். சிலுவையில் அறையுண்ட இயேசு கிறிஸ்துவை உற்று நோக்கி அதில் நம்பிக்கைக் கொள்ளும் யாவரும் வாழ்வு பெறுவர்.கிறிஸ்துவின் அன்பே சிலுவையை அன்பின் அடையாளமாகவும், மன்னிப்பின், தியாகத்தின், மீட்பின் அடையாளமாக மாட்சிப்படுத்துவோம். நற்செய்தியில் இயேசு கூறிய "என்னைப்பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்துதன்சிலுவையைநாள்தோறும்தூக்கிக்கொண்டுஎன்னைப்பின்பற்றட்டும்" (லூக். 9: 23) என்றார். ஆம், சிலுவையை சாபமாக அல்ல, மாறாக வரமாக ஏற்று உண்மையான சீடர்களாக வாழ "திருச்சிலுவையை" ஆராதித்து, மகிமைப்படுத்துவோம் என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் வெளிப்பாட்டில் சிலுவைச் சுமந்த இரட்சகரே எம் இறைவா, உம்மால் உருவாக்கப்பட்ட திருஅவையின் தலைவர்கள் அனைவரும் உம் அன்பின் ஆழத்தை உணர்ந்து உமது பணியே சிறந்தப்பணி என்பதை உணர்ந்து சேவை மனப்பான்மையுடன் செயல்பட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. திருச்சிலுவையின் நாயகரே எம் இறைவா, மாட்சிமையும், மகத்துவமும் நிறைந்த திருச்சிலுவையின் பெருமையை உணர்ந்து முன்மாதிரிகளாக சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாக்கும் பரமனே எம் இறைவா, பல இன்னல்களுக்கிடையே பெற்றோரின் கடன்சுமைகளில் கல்வி கற்று, வேலையில்லாமல் மனச்சோர்வுடன் வாழ்ந்துக்கொண்டிருக்கும் எம் இளைய தலை முறையினருக்கு நல்ல வேலை கிடைத்து வாழ்வில் வெற்றிபெற அருள்புரியுமாறு வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 15.09.2024 பொதுக்காலம் 24ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

I. எசா. 50: 5-9 II. யாக். 2: 14-18 மாற்கு. 8: 27-35

அன்பின் இறைச்சமூகமே, உலக மக்களாட்சிக் காலத்தில் வாழ்ந்துக்கொண்டிருக்கும் சகோதர சகோதரிகளே, இன்றைய உலகில் கடவுள் நம்பிக்கையற்றவர்கள் மட்டுமல்ல, மாறாக கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள் கூட தன்னுடைய வாழ்க்கையின் துயரத்திலிருந்து பயந்து ஓடுகின்றனர். இயேசுவின் சிலுவைச் சாவு நமக்கு பாவத்திலிருந்து விடுதலைக் கொடுத்தது. "மெசியா" என்று பேதுரு அழைத்தார். இயேசுவை முழுமையாகப் புரிந்துக்கொள்ளாத சீடர்களுக்குத்தான் "துன்புறும் மெசியா" என்பதைத் தன் பாடுகளை முன்னிறிவித்ததன் மூலம் எடுத்துரைத்தார். தன் அடையாளமாக சிலுவை இவ்வுலகில் தொடர வேண்டுமென்று அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். சீடர்களைத் தன்னுடைய பணி வாழ்விலும், பாடுகளிலும் பங்கேற்க அழைப்பு விடுத்தார். இவ்வழைப்பின் உயிர் நாடியாகத் தன்னலம் மறந்து சிலுவையைச் சுமந்து அவரைப் பின்தொடர்வதில் அடங்கியுள்ள சவாலை முன் வைத்தார்.

இறைவாக்கினர் எசாயா இறைவனின் பணியைச் செய்ததால் அவரின் செய்தியை இறைவாக்குரைத்ததால் துன்புறும் ஊழியராகத் தன்னை இனம் கண்டு கொண்டார். அதேவேளையில் இறைவன்மீது அசைக்கமுடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தினார். இயேசுவின்மீது நாம் கொள்ளும் நம்பிக்கையை செயல்வடிவில் வெளிப்படுத்த புனித யாக்கோபு அழைப்புவிடுத்தார். துன்புறும் மெசியாவை நாம் நம்புகிறோம், இதுவே நம் நிலைப்பாடு, எனவே துன்புறும் மாந்தரோடு உடனிருக்கவும், அவர்களோடு தோழமைக் கொள்ளவும், அவர்களுக்கு உதவவும், அவர்களுக்காக தியாகம் செய்யவும் "துன்புறும் மெசியா" அழைப்பு விடுக்கின்றார். நம் செயல்கள் வழியாக அவரிடம் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவோம். "சிலுவை வழியே சீடத்துவ வழி" என நாமும் வாழ்ந்து இயேசுவின் உண்மைச் சீடராக துன்புறும் சீடராக சாட்சிய வாழ்வு வாழ்வோம் என உறுதியெடுத்து, இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மீட்பளிக்கும் இறைவா, திருஅவையின் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும்

பொதுநிலையினர் அனைவரும் உமது திட்டத்தை உய்த்துணர்ந்து திருஅவையைத் திறம்பட வழிநடத்த தேவையான ஞானத்தைக் கொடுத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் இறைவா, நாங்கள் கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொள்ளும் பணியில் உடனுழைப்பாளர்களையும், தன்னார்வலர்களையும் இறைப்பணி செய்யும் தாராள நல்லுள்ளங்களை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களுக்காக சிலுவையில் அறையுண்ட இயேசுவே, உமது வேதனை நிறைந்த பாடுகளை தியானிக்கும் நாங்கள் எங்களுக்கு அடுத்திருப்பவர்கள் படுகின்ற பாடுகளிலிருந்து அவர்களை விடுவித்து அமைதியான வாழ்வு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்பு இறைவா, நாட்டில் பொறாமை எண்ணத்தால் நல்ல மனிதர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களின் மனதை மாற்றி நல்லெண்ணம் படைத்தவர்களாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.09.2024 புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர் திருப்பலி

**முன்னுரை**

திரு. T. சாம்சன்

இறையேசுவின் திருக்குலமே, புனித இராபர்ட் பெல்லார்மின் இத்தாலி நாட்டிலுள்ள முந்தி புல்லியானோ பகுதியில் வாழ்ந்த வின்செண்ட் பெல்லார்மின் சிந்தியா செர்வினி பெற்றோருக்கு கி.பி. 1542ம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் மகனாகப் பிறந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய இராபர்ட் பெல்லார்மின் குருவாக விருப்பம் கொண்டு கி.பி. 1560ல் செப்டம்பா 20ம் நாள் இயேசு சபையில் சேர்ந்து குருவானார். பிளான்டசியில் உள்ள லுவைன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியினைத் தொடங்கி தப்பறைகளை விமர்சனம் செய்து உண்மையான கருத்துக்களை பகிர்வதில் சிறந்து விளங்கினார். அருட்தந்தை பெல்லார்மின் அறிவுத் திறமையையும், ஆளுமைத் தன்மையையும் அறிந்த திருத்தந்தை 13ம் கிரகோரியார் அருட்தந்தை பெல்லார்மினை உரோமை குருமடத்தின் குருமாணவர்களுக்கு பேராசிரியராக நியமித்தார். குருமாணவர்களை அருட்தந்தை பெல்லார்மின் அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து வழிநடத்தினார். கி.பி. 1597ம் ஆண்டு திருத்தந்தை 8ம் கிளமெண்ட் ஆலோசகராக திறம்பட செயலாற்றிய பெல்லார்மின் 1598ம் ஆண்டு ஆயராகவும், 1599ம் ஆண்டு கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார்.

இறைவனின் வெளிப்பாடு திருவிவிலியத்தில் மட்டுமல்ல, விசுவாச மரபில் உள்ளது என்னும் புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது இறைவனுக்கு அளிக்கும் ஆராதனை அல்ல, என்ற திரிதெந்து பொதுச்சங்க முடிவுகளை மக்களிடம் கொண்டு சேர்த்த பெல்லார்மின் கோப்பர் நிக்கஸ் மற்றும் கலிலேயாவின் புவிசார்ந்த கருத்துகளுக்கு திருஅவையின்

சார்பாக மறுப்பு தெரிவித்தார். குடியரசின் கொள்கைகள் அனைத்தும் இறைவனிடமிருந்து வருகிறது. அது மக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மக்கள் அதைத் தன் தலைவர்களிடம் ஒப்படைக்கிறார்கள் என்று கூறிய இராபர்ட் பெல்லார்மின் கி.பி. 1621 செப்டம்பர் 17ம் நாள் விண்ணகமடைந்தார். இராபர்ட் பெல்லார்மின் திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1930ம் ஆண்டு ஜூன் 29ம் நாள் புனிதராக உயர்த்தி திருஅவையின் சட்ட வல்லுநர்களுக்கு பாதுகாவலராக அறிவித்தார். புனித இராபர்ட் பெல்லார்மினின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் நமது வாழ்வில் இருக்கும் சிக்கல்களை சரிசெய்து கொள்ள தேவையான மனதிடனை அருளுமாறு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பு தந்தையே இறைவா, உம்திருவுடலாம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். உம்பணியை தங்கள் வாழ்வாக்கி, இறைமக்களை அன்பின் சமூகமாக கட்டியெழுப்பவும் உம் அன்புக் கட்டளைகளை நாங்கள் கடைப்பிடித்து வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. நலமருளும் நல்லாயனே இறைவா, உடல்நலக்குறைவினால் மருத்துவமனையிலும், வீடுகளிலும் இருந்து சிகிச்சைப் பெற்றுவரும் ஒவ்வொருவரையும் நற்கருணை என்னும் உயிரளிக்கும் மருந்தால் சுகம்பெற்று வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. என்றும் வாழும் இறைவா, நாட்டில் வன்முறை, கொலை, கொள்ளை, தீவிரவாதம் போன்ற செயல்கள் நடைபெறாமல் இருக்கவும், மக்கள் நிம்மதியுடன் வாழத் தேவையான பாதுகாப்பை தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, இன்று படிக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்குத் தேவையான நல்ல ஞானத்தையும், பணஉதவியும், பொருளுதவியும் அளித்து அவர்கள் உம்மை பற்றிக்கொண்டு பின்தொடரத் தேவையான அருளைப் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 21.09.2024 புனித மத்தேயு திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இன்றைய தினம் நம் திருஅவை நற்செய்தியாளர் புனித மத்தேயுவை சிறப்பிக்க நம்மை அழைக்கிறது. இயேசுவின் 12 சீடர்களில் ஒருவரும், பாரம்பரிய எழுத்தாளருமாவார். இவர் முதல் சினோப்டிக் நற்செய்தி (மத்தேயுவின் நற்செய்தி)யை அளித்தவர். இஸ்ரேயலின் நவீன "அல்டிகேர்" அருகில் (கலிலேயக் கடலில்) சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்தபோது

இயேசு அவரைத் தம் கூட்டத்திற்கு அழைத்தார். மத்தேயு என்ற பெயருக்கு கிரேக்க மொழியில் "யாவேயின் பரிசு" என்று பொருள்படும். வரி வசூலிப்பவராக பணியாற்றிய லேவி என்று அழைக்கப்படும் மத்தேயுவின் தொழில் அனைத்து இடங்களிலும் அவமதிப்பையும் அவநம்பிக்கையையும் பெற்றார். பரிசேயர்கள் அவரை கீழானவராக கண்டார்கள். ஆகவே நம் இயேசு அவர் வீட்டில் உணவு உண்பதை கண்டு இகழ்ந்தனர். ஆனால் இயேசு "நான் நீதிமான்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்" (மாற்கு 2: 15-17, லூக். 4: 29) என்று கூறியிருந்தார்.

மத்தேயுவின்படி நற்செய்தி உண்மையாக ஒரு யூத கிறிஸ்தவ தேவாலயத்திற்காக ஒரு வலுவான யூத சூழலில் எழுதப்பட்டது. அவரின் சின்னம் ஒரு தேவதை புனித மத்தேயு வரிவசூலிப்பவர்கள், கண்காணிப்பாளர்கள் ஆகியோரின் பாதுகாவலராக கருதப்படுகிறார். இயேசு கிறிஸ்து நிறுவிய இறையாட்சி பற்றிய நற்செய்தியை புனித மத்தேயுதான் முதன் முதலில் எழுதினார் என்றும் அதனை அரமேய மொழியில் எழுதினார் என்றும் திருஅவை மரபு கருதுகிறது. புனித மத்தேயு நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்து, நன்கு கல்விகற்று, அரசாங்க வேலையில் அமர்ந்து வரி வசூலிக்கும் பணியில் ஈடுபட்டு மக்களை துன்புறுத்தினாலும் இயேசுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 8வது சீடராக உயர்ந்தவர். ஆகவே எவ்வளவு பாவிகளானாலும் இயேசுவிடம் வரும்போது நம்மையும் மன்னிப்பார் என்ற நம்பிக்கையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல இறைவா, நம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரும் உமது நற்செய்தியின் போதனைகளை உணர்ந்து, இறையாட்சிப் பணியினை உலகிற்கு எடுத்துரைக்கும் வல்லமையையும், ஆற்றலையும் அளித்து பாதுகாத்திட வரமருள வேண் டிஉம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் பரம தந்தையே இறைவா, உம் ஆற்றல்மிகுந்த போதனைகளால், சிறந்த ஆன்மீகவாதிகளாக மாற்றி, நற்செய்தியின் வல்லுநராக மாறிய புனித மத்தேயுவைப்போல் உம்மை பின்பற்றச் செய்து இச்சிறோரைப் பெரியவராகச் செய்யும் வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியின் அரசரே இறைவா, இன்றைய நாகரீக சூழ்நிலைகளால், குடும்பங்களில் ஊடுருவும் பகைமை, பொறாமை, விட்டுக்கொடுக்கும் தன்மையின்மை, சுயநலம் ஆகிய தீயக்குணங்கள் மாறவும், இயற்கை பேரிடர்களை அடக்கி, மக்களை இயல்பான நிலைக்கு மாற்றியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 22.09.2024 பொதுக்காலம் 25ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. சா.ஞா. 2: 17-20 II. யாக். 3: 16-4: 3 மாற்கு 9: 30-37

இன்று பொதுக்காலம் 25 ம் ஞாயிறு மற்றும் அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மறைச்சாட்சியாக தன்னை அர்ப்பணித்த நினைவு நாளையும் தியானிக்க இத்திருப்பலியில் இணைத்துள்ளோம். இறை இயேசுவோடு இணைந்து இரவும் பகலும் உண்டு உறங்கி பயணித்த திருத்தூதர்களுக்கே புரியவில்லை. தாம் எத்தகைய புனிதமான இறையாட்சி பயணத்தில் உள்ளோம் என. சில நன்மை எனப்பட்டாலும் சுயநலத்தால் தங்களின் ஆசைகளை நாட்டங்களை விட முடியவில்லை. தனது தீய இச்சைகளால் நன்மை செய்வோரை எப்படியெல்லாம் துன்புறுத்துகின்றனர் என்பதை இன்றைய முதல் இரண்டாம் வாசகத்தில் காண்கிறோம். நற்செய்தியிலும் இதனையே தம் சீடர்களுக்கு நிகழப் போவதை முன்னறிவிக்கிறார். மாசு மருவற்ற குழந்தை மனம், தன்னை அன்பு செய்வது போன்று பிறரையும் அன்பு செய்யும் உள்ளம் வேண்டும். இதனை மறந்து போட்டி, பொறாமை, பேராசை, சுரண்டல், தான் என்கிற அகங்காரம், கொண்டு அதனால் பேரச்சம் விளைவிக்கக்கூடிய வெறி பிடித்த செயல்களான பிரிவினைகள் எல்லைக் கட்டுப்பாடு, போர் அச்சம், சமய சாதி வெறி இவைகளால் பதவி மோகம் கொண்டு மனிதத்தை சிதைத்து விடக்கூடாது. ஆனால் இன்று நடப்பது இதுவே. இன்றைய இறை வார்த்தைகளை ஆழ்ந்து தியானித்தால் இந்த உண்மை விளங்கும். அதோடு அருளாளர் அவரின் சான்று வாழ்வையும் உற்று நோக்க வேண்டும்.

இவர் இளவயதிலேயே புனித ஜான் போஸ்கோ அவர்களால் ஈர்க்கப்பட்டு குருவாகி தனது சீரியப் பணிகளால் பல பொறுப்புகளை ஏற்று செயல்பட்டார். முதலாம் உலகப் போரின்போது தனது சலேசிய உடன் பணியாளர்களுக்காக கவலைப்பட்டார். ஆனால் சிறைப்பட்டனர். பின் இவரும் சிறைப்பட்டு இவரது குருவின் உடையைப் பார்த்து நீ குருவா? என கேட்டபோது துணிவோடும் வீரத்தோடும் ஆம் என்றார். தலைமைச் சங்கத்தின் முன் நிறுத்தப்பட்டு பின் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். இவரோடு பணி புரிந்தவர்களும் சில அருட்சகோதரிகளும் மறைசாட்சிகளாக மரித்தனர். திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் இவர்களுக்கு அருளாளர் பட்டம் வழங்கினார். இவரின் வாழ்வைப் பின்பற்றி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா எமது தாய் திரு அவையின் அனைத்து பணியாளர்களும் தங்களுடைய பணிகளில் எதிர்கொள்ளும் அத்தனை சவால்களையும் இறைத் திட்டம் நிறைவேறவே என்றெண்ணி செயல்பட வேண்டிய அருள் வரங்களை அளித்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா உடலைக் கொள்பவர்களுக்கு அஞ்சாமல் நற்செய்தி அறிவிப்புப் பணிகளில் ஈடுபட்டு உள்ள அனைவரும் துணிவோடும் வீரத்தோடும் செயல்பட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கம் நிறைந்தவரே, இவ்வுலகில் உமக்கெதிரான செயல்கள் ஒவ்வொரு நாளும் நிகழ்கின்றவற்றை கண்ணோக்கி, நாட்டில் மனிதனை மனிதராக மதித்து அனைவரும் ஒற்றுமையோடு பாகுபாடின்றி சமாதானமுள்ளவர்களாக வாழ உமது கருணையினால் நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பணி புரியவே வந்தேன் என்றவரே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அடிச்சுவட்டில் மறுமலர்ச்சி நோக்கி பயணிக்க நான்கு ஏடுகளை தினம் வாசித்து மீண்டும் புத்துருவாக்கம் பெற்று கால சூழலுக்கு ஏற்ப அனைத்துலக ஆயர்கள் மாமன்றம் வழியாக அமைதி நீதி சமத்துவம் சகோதரத்துவம் நிறைந்த உலகாக அமைய உம்மை மன்றாடுகிறோம்.

## 23.09.2024 புனித பியோ அருள்பணியாளர் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. மாலா செபமாலை

அன்புள்ளம் கொண்ட இறைச்சமூகமே, இன்று நாம் புனிதர் "பியட்ரல்சினாவின் பியோ"வின் விழாவினைச் சிறப்பிக்க இங்கே கூடியுள்ளோம். இவர் மே 25ம் நாள் 1887ம் ஆண்டு இத்தாலியில் "பியட்ரல்சினா" என்னுமிடத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் க்ராசியோ மரியோ போர்ஜியொன், மரியக்யுசெப்பாடி நுன்சியோ என்னும் விவசாய தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயது முதலே இறைபக்தியில் சிறந்து விளங்கிய இவர் விண்ணகக் காட்சிகளைக் கண்டார். 1903ல் ஜனவரி 6அன்று தனது 15ம் வயதில் "மொர்கோனில்" இருந்த கப்புச்சின் சபையில் நவசந்நியாசியாக சேர்ந்தார். ஜனவரி 22ம் நாள் தனது துறவற ஆடையைப் பெற்றுக்கொண்டு "பியட்ரல் சினோ" என்னும் ஊரில் பாதுகாவலரான புனித ஐந்தாம் பயசின் பெயரை இவரது துறவற பெயராக ஏற்றுக்கொண்டார். இவர் ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல் ஆகிய துறவற வாக்குறுதிகளை ஏற்றுக்கொண்டார். 6ஆண்டுகள் குருத்துவப் படிப்புக்குப் பின்னர் 1910ம் ஆண்டு குருவானராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இவர் இயேசுவின் பாடுபட்ட திருச்சிலுவைமுன் தினமும் அடிக்கடி செபிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். செப்டம்பர் 20ம் நாள் ஒப்புரவு அருளடையாளம் வழங்கிக்கொண்டிருக்கும் வேளையில் இவரது உடலில் இயேசுவின் ஐந்து திருக்காயங்களையும் பெற்றார். காயங்களிலிருந்து வடியும் இரத்தம் நறுமணம் வீசியது. அன்றுமுதல் இயேசு கிறிஸ்து சிலுவை மரத்தில் அனுபவித்த வேதனைகளை வாழ்நாள் முழுவதும் இப்புனித பியோ அனுபவித்தார். இந்தத் திருக்காயங்கள் இவரது புனிதத் தன்மைக்கு கிடைத்தப் பரிசு என்று இவரை பரிசோதித்த மருத்துவ உலகம் சொன்னது. 1968ம் வருடம் செப்டம்பர் 23ம் நாள் இறுதித்

திருப்பலியாற்றியதும் கையில் செபமாலை ஏந்தி செபித்த வண்ணம் "இயேசு", "மரியா" என்னும் திருப்பெயர்களை உச்சரித்தவாரே தமது 81ம் வயதில் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை 2ம் ஜான்பால் இவருக்கு 1999ம் ஆண்டு அருளாளர் பட்டமும் 2002, ஜீன் 16ல் புனிதர் பட்டமும் வழங்கினார். இவர் இறந்து 40 ஆண்டுகள் கழித்து இவரது கல்லறையைத் திறந்து பார்த்தபோது இவரது உடல் அழியாது இருந்தது. "சான்ஜியோவானி ரொட்டொன்டோ" அருகிலுள்ள புனித பியோ ஆலயத்தில் வைத்து செபித்தார். நாமும் இப்புனிதரின் வாழ்க்கையை பின்பற்றி நம்பிக்கையுள்ள மக்களாக வாழ இத்திருப்பலியில் வரம் வேண்டி செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் தலைவரான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் புனித பியோவின் அருளாசிர் பெற்று இயேசுவின் திருக்காயங்களால் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டு தத்தம் அருட்பணிகளில் சிறந்து விளங்கவும் உடல்உள்ள நலம் பெறவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இந்திய நாட்டையும் மாநிலங்களையும் அளும் தலைவர்கள், பட்டம், பதவி, பணம் இவைகளையே பெரும் குறிக்கோளாகக் கொள்ளாமல் நீதி, நேர்மையுடன் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பாடுபட்டு மக்களின் முக்கியமானத் தேவைகளான வாழ்வாதாரங்கள் அனைவருக்கும் கிடைக்கப்பாடுபட வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, இன்றைய இளைய தலைமுறையினர் தங்களின் விருப்பத்திற்கேற்ப வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்களின் பெற்றோரையும், பெரியவர்களையும் மதித்து நடக்கவும், உம் பாதையில் நாளும் நடந்திடத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 27.09.2024 புனித விசென்ட் தெ பால் திருப்பலி

**முன்னுரை** திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

அன்பின் இறைச்சமூகமே, இன்று திருஅவை புனித வின்சென்ட் தே பவுல் திருவிழாவை கொண்டாடுகிறது. இவர் 1581ல் பிரான்ஸ் தேசத்தில் காங்கனியின் பாவ்ய் என்ற இடத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவர் இறையியல் படிப்பை முடித்தவுடன் 1600ல் குருவாக அருட்பொழிவு பெற்றார். 1605ல் துருக்கிய கடற்கொள்ளையர்கள் இவரைப் பிடித்துச் சென்று குனிஸ் பகுதியில் அடிமையாக விற்றுவிட்டனர். 1607ல் அங்கிருந்து தப்பித்து பிரான்ஸ் நாட்டிற்குத் திரும்பினார். பின்பு உரோமைக்கு சென்று தனது படிப்பைத் தொடர்ந்தார். 1609ல் 4ம் ஹென்றி அரசருக்கு பணிசெய்ய அனுப்பப்பட்டார். 1622ல் போர்க்கப்பலில் குருவாக நியமிக்கப்பட்டார். 1624ல் வின்சென்ட் மறைப்பணிச் சபை என்ற துறவற

சபையை நிறுவினார். இந்த சபையின் குருக்கள், "வின்சென்டியர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். இவர் பிறரன்பு பணிகளில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். இவர் 1660 செப்டம்பர் 27ல் பிரான்ஸ் தேசத்தில் பாரிசில் இறந்தார். பாரிசில் உள்ள வின்சென்டியன் இல்லத்தில் இவரது எலும்புக்கூடு மெழுகினால் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டுள்ளது. புனிதரின் பிறரன்புப் பணிகளில் பரவசமான அருளாளர் ப்ரடெரிக் ஒசாமை 1833ல் புனித வின்சென்ட் தே பவுல் சபையை ஆரம்பித்தார். இன்று இந்த சபை 132 நாடுகளில் வறுமை வயிறுகளின் பசிதனை போக்கி, ஏழைகளின் நடுவே நற்செய்தி அறிவித்து சேவை செய்து வருகிறது. ஏழைகளின் விழி நீர் துடைக்கும் விரல்களாமாற நாம் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பின் உருவே இறைவா, எங்கள் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் ஆவியாரின் துணைக்கொண்டு திருஅவை மக்களின் கண்களை திறந்து ஆவியிலும் உண்மையிலும் வழிநடத்திச்செல்ல வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் இறைவா, ஏழை எளிய மக்களுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்த புனித வின்சென்ட் தெ பவுல் சபை ஊழியர்களை பாதுகாத்திடவும் அவர்களின் பிறரன்புப் பணி தொடர்ந்து தொய்வின்றி நடைபெற அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. பாவிகளின் அடைக்கலமே எம் இறைவா, வேலைத்தேடி அலைந்து கொண்டிருக்கும் எண்ணற்ற இளையோருக்கும், பட்டதாரிகளுக்கும் நல்ல வேலை கிடைத்திடவும், அதனால் வாழ்வில் வளம்பெற்று உம்மீது ஆழ்ந்த நம்பிக்கைகொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 29.09.2024 பொதுக்காலம் 26ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. எண். 11: 25-29 II. யாக். 5: 1-6 மாற்கு 9: 38-48

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று பொதுக்காலம் 26ம் ஞாயிறு ஆண்டவர் கூறுகிறார், இடறலாய் இருக்காதீர்கள், இறையாட்சிக்கு உங்களை தகுதிப்படுத்துங்கள் என அழைக்கிறார். இன்றைய நற்செய்தியில் 2வகை இடறல்களை இயேசு குறிப்பிடுகிறார். அடுத்தவர்க்கு இடறலாய் இருப்பது, தனக்குத் தானே இடறலாய் இருப்பது. **முதல் இடறல்:** நற்செய்தியின் முதற் பகுதியில் திருத்தூதர்கள் தங்கள் குழுவைச் சாராத (புறவினத்தான்) ஒருவன் இயேசுவின் பெயரால் பேயோட்டுவதைக் கண்டு பொறுக்கமுடியாமல் இடறல்பட்டு இயேசுவிடம் முறையிடுகின்றனர். அதற்கு இயேசுவின் பதில் சாட்டையடிபோல் இருந்தது. "அவர்களை தடுக்க வேண்டாம், ஏனெனில்

என் பெயரால் வல்ல செயல் செய்பவர் அவ்வளவு எளிதாக என்னைக் குறித்து இகழ்ந்து பேசமாட்டார், ஏனெனில் நமக்கெதிராக இராதவர் நம் சார்பாக இருக்கிறார் (மாற்கு 9: 39) அதற்கு விளக்காக "என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோரள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி கடலில் தள்ளுவது அவருக்கு நல்லது என்றார் (மாற்கு 9: 42).

**இரண்டாம் இடறல்:** தனக்குத் தானே இடறலாய் இருப்பது, இதையும் ஆண்டவர் கண்டிக்கிறார். எந்த உடல் உறுப்பாவது நிலை வாழ்வை பெறுவதற்கு இறையாட்சியை அடைவதற்கு தடையாக இருக்குமேயானால் அதை வெட்டியெறியச் சொல்கிறார். ஒருவனுக்கு தன்னுடைய உறுப்புகள் இடறலாய் இருந்தால் அதை வெட்டியெரிந்துவிடு என்கிறார். பாவத்தில் நாம் விழாமலும் பிறரை விழத்தாட்டாமலும் விழிப்புடன் இருக்க இறையேசுவைச் சார்ந்து அவரது விருப்பத்தின்படி அமைவதாக இருக்க வேண்டும். இறையாட்சிக்கு நாம் தகுதியுள்ளவர்களாக வாழ நம்மிடமுள்ள இடறல் எனும் பாவங்களை அகற்றி இறைவனோடு ஒன்றுபட வேண்டிய தகுதிப்பெற்றவர்களாக வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் பணியாளர்கள் நமக்கெதிராய் இராதவர் நம் சார்பாக இருக்கிறார் என்ற இயேசுவின் மனநிலையில் அனைவரையும் இறையாட்சிக்கு அழைத்துச் செல்லும் தோழமை உணர்வுடன் பணிசெய்ய உம் ஆவியின் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இயற்கையை படைத்து அழகு பார்த்தவரே எம் இறைவா, நீர் உருவாக்கிய இயற்கையினால் இன்று பலவிதமான பாதிப்புகள் ஏற்பட்டு மக்கள் அவதியுறுகின்றனர். நாங்கள் செய்த, செய்கின்ற தவறுகளை மன்னித்து மக்களை நலமோடும் வளமோடும் பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பு இறைவா, எங்களது விசுவாசமும் நம்பிக்கையும் இயேசுவுடன் இறையாட்சியில் ஒன்று சேரவேண்டுமென்பதே இலக்கு. இதற்கு தடையாக உள்ள இடறல் என்னும் பாவத்தில் நாங்கள் விழாமலும் பிறருக்கு இடறலாய் இல்லாமல் அவர்களோடு உம் இறையாட்சியைக் கட்டியெழுப்பும் தாராள உள்ளம் படைத்தவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பு இறைவா, இன்றைய காலக்கட்டத்தில் இறை நம்பிக்கை, பயம், அச்சம் என்ற உணர்வினை இழந்து உமக்கெதிராக மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களை அன்புக்கரத்தால் ஆசீர்வதித்து, கருணையுள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.09.2024 புனித ஜெரோம் அருள்பணியாளர் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. டிலைலா சேவியர்

திருவிவிலியத்தை மொழிபெயர்த்த மிகச்சிறந்த மொழிப் பெயர்ப்பாளர்களில் இவரும் ஒருவர். இவர் விவிலியத்தை தூ யஆவியாரின் துணையோடும், வானத்தூதர்களின் வழிநடத்துதலாலும் விவிலியத்தை மொழிபெயர்த்ததால் கத்தோலிக்க திருஅவை இவரை புனிதர் நிலைக்கு உயர்த்தியது. புனித ஜெரோம் யுகோஸ்லாவியாவில் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவர். லத்தின், கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் புலமையடைந்த இவர் தனது 39வது வயதில் குருப்பட்டம் பெற்றார். இவர் விவிலியத்தை எபிரேயம், அரமேயிக் மொழியிலிருந்து நேரிடையாக லத்தினுக்கு மொழிபெயர்த்தார். இதனால் கத்தோலிக்க திருஅவையின் அதிகாரப்பூர்வமான மொழி பெயர்ப்பாளரானார். புனித ஜெரோம் தன்னுடைய பழைய வாழ்க்கையின் பாவங்களை நினைத்து தன் மார்வை கல்லால் அடித்துக்கொள்வார். ஒவ்வொருவரும் தன்னுடைய மரணத்தை நினைவுப்படுத்த தன்னுடைய மேஜையின்மீது ஒரு மண்டை ஓட்டை வைத்திருப்பார். இவர் கி.பி. 420ல் இவரது உடலை உரோமையில் உள்ள மரியன்னை தேவாலயத்தில் அடக்கம் செய்தனர். பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் நூலகங்கள் போன்றவர்களுக்கு பாதுகாவலாக உள்ளார். இவரின் தாரக மந்திரம் விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன் என்பது. எனவே தெளிந்த அறிவையும், புத்திக்கூர்மையும், கல்வியறிவையும் பெற்றுக்கொள்ள புனித ஜெரோம் வழியாக மன்றாடுவோம். நமது அறிவாற்றலை ஆக்க செயலுக்காக மட்டும் பயன்படுத்த இத்திருப்பலியில் செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இறைப்பணியாளர்கள் அனைவருக்கும் நல்ல உடல்உள்ள ஆன்ம நலனோடு திருஅவையின் வளர்ச்சிக்காக மனந்தளராது பணிபுரியத் தேவையான அருள்வரங்களைப் பொழிந்திட உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் இருப்பிடமே இறைவா, நீர் எங்களுக்கு விட்டுச்சென்ற விவிலிய மதிப்பீடுகளை நற்செய்திகளின் வழியாக வாசித்து, உணர்ந்து உம்மதிப்பீடுகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துரைக்கும் நல்ல ஞானத்தை எங்களுக்கு அளித்தருள வெண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, நற்செய்தியை அறிவித்துக் கொண்டிருக்கும் அனைத்து மறைப்பணியாளர்களையும் ஆசீர்வதியும், எவ்வித எதிர்பார்ப்புமின்றி உமது வார்த்தைகளை எடுத்துரைக்கும் பரந்த உள்ளம் கொண்டவர்களை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## புனித அன்னை தெரசா - வாழ்வு தரும் பாடம்

திரு. பி. விக்டர்

கொல்கத்தா நகர் புனித அன்னை தெரசா அவர்கள் 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் நாள் யூகோஸ்லாவியா (வட மாசிடோனியா) உள்ள ஒரு பக்தியுள்ள பெற்றோருக்கு மகளாகப் பிறந்தார். இளம் வயதிலேயே கடவுளின் அழைப்பை உணர்ந்து இறைப்பணிக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தார். 1938ம் ஆண்டு அயர்லாந்து நாட்டிலுள்ள "லொரடோ கன்னியர் சபையில்" உள்ள சகோதரிகளோடு இணைந்து தனது இறைப்பணி வாழ்வைத் தொடங்கினார். தொடர்ந்து இவர் இந்தியாவில் உள்ள கல்கத்தா நகரில் அமைந்துள்ள "லொரட்டோ" சபையின் அருட்சகோதரிகளோடு இணைந்து இறைப்பணி செய்ய அனுப்பி வைக்கப்பட்டார். அங்கிருந்த வேளையில் ஒருமுறை "டார்ஜிலிங்" நகருக்கு இறை தியானத்திற்காகப் பயணம் செய்தபோது கல்கத்தா நகரில் உள்ள "ஏழையரின் ஏழைகளுக்கு" (Poorest of the Poor) பணி செய்ய கடவுளால் உணர்த்தப்பட்டார். தியானம் முடிந்தவுடன் கல்கத்தா திரும்பிய அன்னை தெரசா அவர்கள் உடனே தனது சபை தலைவியிடம் தனக்கு நேர்ந்த இறையனுபவத்தையும் கடவுளின் அழைப்பையும் வெளிப்படுத்தி "லோரட்டோ சபையைவிட்டு" வெளியேற அனுமதி வேண்டினார். முதலில் அனுமதி மறுத்த சபை தலைவி அன்னை தெரசாவின் தொடர் வற்புறுத்தலின் பேரில் அனுமதியளித்தார். அதனைத் தொடர்ந்து கல்கத்தா நகரில் உள்ள ஆயர் அவர்களின் அனுமதியையும் பெற்று 1948ம் ஆண்டு லோரட்டோ சபையை விட்டு வெளியேறினார்.

அன்னை தெரசா "லோரட்டோ" சபையை விட்டு வெளியேறிய வேளையில் அவரோடு இணைந்து சபையிலிருந்து வெளியேறிய "ஆக்னஸ்" என்பவரோடு இணைந்து கல்கத்தா நகரில் ஏழையரின் ஏழைகளுக்கு பணி செய்யத் தொடங்கினார். அவரோடு இணைந்து பணி செய்ய ஒருசில பெண்களும் அவரோடு இணைந்து செயல்பட முன்வந்தனர். இவ்வாறாக 1950ம் ஆண்டு 12 நபர்களோடு 'Missionaries of Charity" என்கிற சபையை அன்னை தெரசா அவர்கள் கல்கத்தா நகரில் நிறுவினர். தொடக்கத்தில் சில அநாதை குழந்தைகளையும் கைவிடப்பட்ட குழந்தைகளையும் ஒன்று சேர்த்து அவர்களைப் பாதுகாத்து பராமரித்தார். பராமரிக்க இடம் இல்லை, செலவுக்கு பணமில்லை, ஆனால் பணிசெய்ய வேண்டும், எனவே அன்னையும் மற்ற சகோதரிகளும் கல்கத்தா நகரில் வாழ்ந்த வசதிப் படைத்த நிறுவனங்களில் சென்று கையேந்தி பிச்சையெடுத்து அதில் கிடைத்த பணம், பொருட்களைக் கொண்டு பராமரித்து வந்தனர். அவ்வாறு சென்ற வேளைகளில் பலரால் பலமுறை அவமானப்படுத்தப்பட்டதும் உண்டு. முகத்தில் காரி உமிழப்பட்டதும் உண்டு இயேசுவுக்காக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்ட அன்னை

தொடர்ந்து தனது பணியை உற்சாகத்துடன் நடத்தினார். தெருக்களில் வாழ்ந்த நோயாளிகளைத் தேடிச் சென்று அவர்களை அழைத்து வந்து உதவி செய்தார். இவரது அயராத உழைப்பையும், அர்ப்பணிப்பையும் கண்டவர்கள் தாராள மனதுடன் உதவி செய்ய முன்வந்தனர். இதனால் குழந்தைகளுக்கு ஒரு இல்லத்தையும், நோயாளிகளுக்கு ஒரு மருத்துவ உதவி இல்லத்தையும் நிறுவினார். இவரது தன்னலமற்ற அன்புமிக்க சேவையைக் கவனித்த அநேக பெண்கள் இவரது இல்லத்தில் இணைந்து பணிசெய்யத் தங்களை ஒப்புக்கொடுத்தனர். பணியும் விரிவடைந்தது, பணி செய்ய வந்தவர்களும் பெருகினர்.

தனது சபையை இந்தியாவின் பல மாநிலங்களிலுள்ள நகரங்களுக்கு விரிவுப்படுத்தினார். உதவிகளும் பெருகியது, போதும் போதும் என்று சொல்லுகிற அளவுக்கு நன்கொடைகள் குவிந்தன. எனவே அன்னை அவர்கள் அநேக புது இல்லங்களை அமைத்து பணியை விரிவுப்படுத்தினார். அன்னையின் பணிபற்றி கேள்வியுற்ற பல வெளிநாட்டு இயக்கங்கள், தங்கள் நாட்டுக்கு வந்து பணிசெய்ய அன்னைக்கு அழைப்பு விடுத்தனர். சட்டத்திற்குட்பட்டு அந்நாட்டு அரசின் அனுமதியோடு அன்னையின் 'missionaries of Charity" சபையானது உலகளவில் பல்வேறு நாடுகளிலும் இயங்கத் தொடங்கியது. மரிக்கும் நிலையிலுள்ள ஆதரவற்ற முதியோர் இல்லங்கள் மருத்துவ ஆலோசனை மற்றும் உதவிமையங்கள் மூளைவளர்ச்சியற்ற பிள்ளைகளுக்கான இல்லங்கள், அனாதை குழந்தை இல்லங்கள், தொழுநோயாளர் இல்லங்கள், நீரழிவு நோயாளர் இல்லங்கள் அவசர உதவி இல்லங்கள் சபை வளர்ச்சிக்காக பயிற்சி இல்லங்கள், நற்செய்தி அறிவிப்பு மற்றும் ஆலோசனை மையங்கள் என பல்வேறு துறைகளில் இவரது பணிவாழ்வு ஆல்போல் தழைத்து விரிந்துள்ளது.

உலகிலுள்ள சுமார் 130 நாடுகளில் சுமார் 4500 அருட்சகோதரிகளோடு இவரது பணி பரந்துள்ளது. விளிம்பு நிலை மக்களுக்கான இவரது பணி வாழ்வு இவருக்கு பற்பல விருதுகளையும் பெற்றுத் தந்துள்ளது. இந்தியாவில் உயரிய விருதான "பத்மபூஷன்" மற்றும் பாரத் ரத்னா உட்பட உலக அளவில் நோபல் பரிசு அமெரிக்க அரசிடமிருந்தும், இங்கிலாந்து அரசிடமிருந்தும், திருத்தந்தை 23ம் யோவான் பெயரிலும் இன்னும் எண்ணற்ற விருதுகளையும் பெற்றார். விருதுகள் கொடுக்கும் மகிழ்ச்சியைவிட நோயாளிகளுக்கு சேவை செய்வதையே உயரியதாக அவர் எண்ணினார். இவ்வாறாக பணிசெய்த அன்னை அவர்கள் 1998ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஐந்தாம் நாள் தனது 87வது வயதில் இறைவனடி சேர்ந்தார். 2016ம் ஆண்டு திருத்தநதை 2ம் ஜான்பால் அவர்கள் இவருக்கு "புனிதர்பட்டம்" வழங்கி கௌரவித்தார். கிறிஸ்தவர்களின் சேவை வாழ்விற்கு அன்னை தெரசாவின் வழ்வு ஒரு பாடமாகவும், சாட்சியாகவும் விளங்குகிறது.

**அன்னை தனது பணிவாழ்வில் சந்தித்த போராட்ட சூழல்கள்:**

- ☐ இவரது பணிவாழ்வின் தொடக்கம் இவரது சொந்த சபையினரால் "லொரட்டோ நிராகரிக்கப்பட்டது. சபையைவிட்டு வெளியேற அனுமதி மறுக்கப்பட்டது. பணி செய்யவும் அனுமதி மறுக்கப்பட்டது.
- ☐ கருக்கலைப்புக் குறித்தும் இவரது கருத்துக்கள் சமுதாயத்தில் பல குழுவினரின் எதிர்ப்புகளுக்கு உள்ளாகியது. அவர்கள் இவரைத் தவறான கண்ணோட்டத்தோடு பார்த்தனர்.
- ☐ மரிக்கும் நிலையிலுள்ள தொழுநோயாளிகள், கேன்சர் நோயாளிகள் போன்றவர்களைப் பராமரிப்பதில் உள்ள சிரமங்கள் இவருக்குப் பெரும் சவாலாக இருந்துத.
- ☐ தன்னிடமுள்ள (உடைமைகளை) தன்னுடைய கிளை சபைகளுக்கு அவரவர் தேவைகளுக்கேற்ப பிரித்துக் கொடுப்பதில் நேர்மையான அதே வேளையில் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்ற போராட்டமாக இருந்தது.

இத்தகைய வாழ்வின் அன்றாட போராட்டங்களிலிருந்து அன்னை தெரசா அவர்கள் எவ்வாறு வெற்றிக் கண்டார்கள். இதையும் அறிவோம்.

**அன்னையின் வெற்றிக்கான வழிகள்:**

- ☐ செபத்தில் கடவுளோடு இணைந்திருந்து அவரது ஞானத்தையும், வழிநடத்துதலையும் பெற்று, தனக்கு வந்த போராட்டங்களை மேற்கொண்டார்.
- ☐ கடவுளின் திட்டத்திற்கு தன்னுடைய திட்டத்தை அர்ப்பணித்தார், கடவுளை நம்பி அவரது திட்டத்திற்கும் அழைப்புக்கும் முழுமையாகக் கீழ்ப்படிந்தார்.
- ☐ தனக்கான அடையாளத்தைத் தேடாமல் எளிமையுடனும் மனத் தாழ்மையுடனும் தனது பணியைச் செய்வதில் மட்டுமே கவனமாக இருந்தார்.
- ☐ தொடர்ச்சியாக வந்த எல்லா கடினமான விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் தனது மனஉறுதியோடு ஏழை எளியவர்களுக்கு பணி செய்வதின்மூலம் தோற்கடித்தார்.
- ☐ அவருடன் பணிசெய்த அவரது சபையைச் சார்ந்த சகோதரிகளின் உடனிருப்பும், ஒத்துழைப்பும் அவருக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தது, பணி செய்ய வைத்தது.
- ☐ எதிர்ப்புகள், கடினமான விமர்சனங்கள், தடைகள் வரும் வேளைகளில் தனது பகுதியிலுள்ள ஆயர் அவர்களையும் ஆன்ம வழிகாட்டிகளையும் தனக்கெனயிருந்த ஆலோசகர்களின் கருத்துக்களைக் கேட்டு செயல்பட்டு வெற்றக் கண்டனர்.

- ☐ தனக்கு வரும் துன்பங்களின் மத்தியில் கடவுளின் உடனிருப்பையும் அதனிமித்தம் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் அவரது அன்பின் வழியே பெற்று தன்னைப் பெலப்படுத்திக்கொண்டார்.
- ☐ தனக்கு வரும் துன்பங்களை கிறிஸ்துவின் துன்பத்தில் பங்கெடுப்பதாக நினைத்து பங்கெடுத்தார். அவர் யாருக்கு பணிசெய்தாரோ அவர்களிடத்தில் அதைக் கண்டார்.
- ☐ தனக்குக் கிடைத்த வாய்ப்புக்காகவும் உதவிகளுக்காகவும் எப்போதும் நன்றி சொல்ல மறக்கமாட்டார்.
- ☐ தன்னுடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு கடவுளின் வல்லமையில் நம்பிக்கைவைத்து அவரது பணி தன்மூலம் செய்து சாதித்தார்.

அன்னை தெரசா அவர்களின் பணி வாழ்வும் சந்தித்த சவால்களும், சவால்களை வென்றெடுத்த வழிமுறைகளும் நமது வாழ்வை வளமாக்கட்டும், வழிகாட்டட்டும்.

## புனித தந்தை பியோவின் புனித வாழ்வை அறிவோம்

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருச்சபை செப்டம்பர் 23ந்தேதி பியத்ரல்சினா புனித பியோவின் விழாவைக் கொண்டாடுகின்றது. இத்தாலி நாட்டில் வாழ்ந்த இந்த கப்புசின் (பிரான்சிஸ்கு) சபை குரு, புனிதத்தையே தமது வாழ்வாகக் கொண்டிருந்தவர். அதற்கு பரிசாக ஆண்டவர் இயேசுவின் ஐந்து காயங்களைத் தமது உடலில் பெற்றப் பேறுடையவர். இவரது வாழ்நாள் முழுவதும் உடல்நல பாதிப்புகள் தொடர்ந்தாலும், ஆண்டவர் மீது கொண்ட விசுவாசத்தால் பல்வேறு அற்புதங்களைச் செய்து வாழும் புனிதர் என்று அழைக்கப்பட்டார். புனித பியோ, இத்தாலி நாட்டின் தென்பகுதியில் உள்ள பியத்ரல்சினாவில் கிராசியோ மரியோ - குசேப்பா நுன்சியோ தம்பதியரின் மகனாக 1887 மே 25ந்தேதி பிறந்தார். விவசாயம் செய்து வாழ்ந்த இவரது பக்தியுள்ளப் பெற்றோர், திருமுழுக்கின் பொழுது இவருக்கு பிரான்செஸ்கோ என்று பெயரிட்டனர். இவருக்கு ஒரு மூத்த சகோதரரும், மூன்று தங்கைகளும் இருந்தனர். சிறு பருவத்திலேயே பக்தியில் சிறந்து விளங்கிய இவர், தமது ஐந்தாம் வயதிலேயே தமது வாழ்வை கடவுளுக்கு அர்ப்பணிக்க முடிவு செய்தார்.

குடும்பத்தினர் அனைவரோடும் சேர்ந்து பிரான்செஸ்கோ நாள்தோறும் திருப்பலியில் பங்கேற்று வந்தார். மேலும், திருப்பலி வேளையில் குருவுக்கு பீடவுதவியாளராக ஆர்வத்தோடு பணி செய்தார். தமது பங்கில் கொண்டாடப்பட்ட புனிதர்கள் விழாக்களில் மிக உற்சாகமாகப் பங்கேற்றார். ஆலயத்தில் அருளிக்கம் கொண்டிருந்தத் திருந்தந்தை புனித முதலாம் பயஸ் மீது இவருக்குத் தனிப்பட்ட பக்தி இருந்தது. சிறு வயதிலேயே, இயேசுவின்

அன்புக்காக வெறும் தரையில் படுத்தல் போன்ற ஒறுத்தல் முயற்சிகளிலும் இவர் ஈடுபட்டார். ஏழ்மையின் காரணமாக குடும்பத்தின் வேலைகளில் சிறு வயது முதலே இவரும் ஈடுபட்டார். குடும்பத்திற்குச் சொந்தமான சிறிய ஆட்டு மந்தையை மேய்க்கும் வேலையை இவர் செய்தார். அடிக்கடி உடல்நலக் குறைவு ஏற்பட்டதன் காரணமாக, ஒழுங்காகப் பள்ளி சென்று படிக்க முடியாமல் துன்புற்றார். பத்து வயதிலேயே, துறவறம் மேற்கொள்ள விரும்பி அருகிலிருந்த மடத்தில் சென்று அனுமதி கேட்டார். மேலும், சில ஆண்டுகள் படித்துவிட்டு வருமாறு அந்தத் துறவிகள் இவரைப் பெற்றோருடன் திரும்ப அனுப்பிவிட்டனர்.

15 வயதில் கப்புச்சின் சபையில் சேர்ந்து நவசந்நியாசி ஆன இவர், 1903 ஜனவரி 22ந்தேதி துறவற ஆடையைப் பெற்றார். அப்போது, புனித முதலாம் பயஸ் மீது கொண்டிருந்த பக்தியால் தமது பெயரை பியோ என்று மாற்றிக்கொண்டார். ஆறு ஆண்டுகள் பயிற்சிக்குப் பிறகு, 1910ல் கப்புச்சின் குருவாகத் திருநிலைப்பாடு பெற்றார். சிறிது காலம் குருவாகப் பணியாற்றியப்பின், உடல்நலம் குன்றியதால் ஓய்வுக்காக வீட்டுக்கு அனுப்பப்பட்டார். 1916 செப்டம்பர் 4ந்தேதி, மீண்டும் குருத்துவப் பணியைத் தொடர்ந்திட அழைப்பு பெற்றார். 1915ல், இவர் முதலாம் உலகப் போரில் காயம் அடைந்த வீரர்களுக்கு சேவை செய்யச் சென்றார். 1916 மார்ச்சில் ஏற்பட்ட காசநோய் பாதிப்பால் பல மாதங்களை இவர் மருத்துவமனையில் கழிக்க நேரிட்டது. 1917ல் பாரி நகரில் இருந்த சான் ஜொவான்னி ரொத்தொந்தோ துறவில்லத்திற்கு அனுப்பப்பட்டு, மக்களின் ஆன்ம இயக்குநராகப் பணியைத் தொடங்கினார். 1918 செப்டம்பர் 20ந்தேதி திருப்பலியை முடித்ததும் இயேசுவைக் காட்சியாகக் கண்ட இவர், ஆண்டவரின் ஐந்து காயங்களைத் தமது உடலில் வரமாகப் பெற்றார்.

இதனால், திருச்சபை அதிகாரிகளும் மருத்துவர்களும் விசாரணை நடத்தவும் ஆய்வு செய்யவும் பியோவை அணுகினர். மக்கள் பலரும் இவரது காயங்களைக் காணத் திரண்டு வந்தனர். இவர் நிறைவேற்றிய காலை திருப்பலியில் பங்கேற்க மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டினர். ஏராளமான நோயாளிகள் விருப்பத்துடன் இவரிடம் வந்து ஆசிபெற்று உடல்நலமும் மனநலமும் பெற்றுச் சென்றனர். தம்மை நாடி வந்த மக்களுக்கு ஒப்புரவு அருளடையாளம் வழங்குவதற்காக, இவர் நாள்தோறும் பத்து மணி நேரம் செலவிட வேண்டியிருந்தது. 1924 மற்றும் 1931ல் இவரது ஐந்துகாய வரம் குறித்து திருச்சபை அதிகாரிகள் ஐயம் எழுப்பினர். அவ்வேளைகளில் பொதுவில் திருப்பலி நிறைவேற்றவும், ஒப்புரவு அருளடையாளம் வழங்கவும் இவருக்குத் தடை விதிக்கப்பட்டது. ஆயினும், சிறிது காலத்தில் தடை நீங்கியது. துறவில்லத்தை விட்டு இவர் அரிதாகவே வெளியே சென்றார். திரளான மக்கள் நாள்தோறும் இவரைத் தேடி வந்து கொண்டே இருந்தனர். இவரது ஆலோசனைப்படி, 1946ல் கர்கனோ மலையில் 350 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு அடித்தளம் இடப்பட்டது.

பியோ, மக்களை கடவுளுக்கு நெருக்கமாகக் கொண்டு செல்லப் பெரிதும் முயன்றார். மக்களின் உள்ளங்களை அறியும் திறன் பெற்றிருந்த இவரிடம், பலரும் ஆன்மிக ஆலோசனை பெற்றுச் சென்றனர். இவர் இயேசுவின் பாடுபட்ட சொரூபத்தின் முன்பாக, அடிக்கடி செபிக்கும் வழக்கம் கொண்டிருந்தார். பல்வேறு வேதனைகளை அனுபவித்த வேளைகளில், இயேசுவின் திருப்பாடுகளை அதிகமாக தியானம் செய்தார். ஆண்டவரின் வேதனைகளுக்கு ஆறுதலாகவும், மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாகவும் தமது வேதனைகளை ஒப்புக்கொடுத்தார். பியோவின் உடலில் இருந்த ஐந்து காயங்களில் இருந்து வந்த ரத்தம் நறுமணம் வீசியது. முன்னாள் திருத்தந்தை புனித 2ம் யோவான் பவுல் திருச்சபையின் உயர்ந்தப் பதவிக்கு வருவார் என, அவர் குருவாக இருந்தபோதே இவர் முன்னறிவித்ததாக அறிகிறோம். அவர் பேராயராக இருந்தபோது அனுப்பிய விண்ணப்பத்தை ஏற்று பியோ செபித்ததால், ஒரு பெண்மணி புற்றுநோய் நீங்கி நலம் பெற்றதாகவும் வரலாறு கூறுகிறது. இவ்வாறு, பியோ வாழ்ந்த காலத்திலேயே அவரது புனிதத்தன்மை சிறப்பாக வெளிப்பட்டுள்ளது.

1968 செப்டம்பர் 22ந்தேதி தமது இறுதி திருப்பலியை நிறைவேற்றிய பியோ, மறுநாள் இறையடி சேர்ந்தார். 81வது வயதில் இவர் இறந்ததும், இவரது உடலில் பதிந்திருந்த ஐந்து காயங்களும் மறைந்துவிட்டன. திருத்தந்தை 2ம் யோவான் பவுல், இவருக்கு 2002 ஜூன் 16ந்தேதி புனிதர் பட்டம் வழங்கினார். 2008 மார்ச் 3ந்தேதி புனித பியோவின் கல்லறையைத் தோண்டியபோது, அவரது உடல் அழியாமல் இருந்தது. சான் ஜொவான்னி ரொத்தொந்தோ பகுதியில் உள்ள புனித பியோ ஆலயத்தில் தற்போது அதைக் காணலாம். புனித பியோ, சிறு வயது முதலே இயேசுவையும் மரியாவையும் காட்சியில் கண்டதாக அறிகிறோம். அவர் தமது பக்தியின் மேன்மையால், மண்ணகத்தில் இருந்தே விண்ணகத்தைத் தொடர்பு கொள்கிறவராக வாழ்ந்தார். தமது நோய்கள் மற்றும் துன்பங்களோடு, இயேசுவின் ஐந்து காயங்களின் வேதனைகளையும் தம்மில் தாங்கினார். தம்மைத் தேடி வந்த மக்களின் உடல், மனப் பிரச்சனைகளை நீக்கி நலமளிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அவரைப் போன்று புனிதமாக வாழ்ந்தால், நாமும்கூட பல்வேறு அற்புதங்களை நிகழ்த்த முடியும்.

## அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மார்க்ஸ் அருளாளரான வரலாறு

திரு. ஜான் அலெக்ஸ்

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிசபிரிவினருக்கும்இடையேஉள்நாட்டுபோர்நடந்துகொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறி கொண்ட போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்கள் என தாக்குதல்களை கொடுத்தனர். இதில் சில புனிதர்களின் திருப்பண்டங்கள் அழிக்கப்பட்டன, பல்வேறு திருஅவையின்

அடையாளங்கள் அழிக்கப்பட்டதுடன் இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள் பொது நிலையினர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர். நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களை சேகரித்தார். மார்ச் 2000ல் கோலிசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறைமாவட்டங்களும் காலந்து கொண்டன. சுமார் 10000க்கும் மேலான ஸ்பெயின்நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உளுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும் சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக்குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொலொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை பார்க்கும் போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் எட்டிப்பார்க்கத்தான் செய்கிறது.

**வாலென்சியாவின் குழுவினர் :**

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளை கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி.ஜோசப் கலாசன்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருக்கிறார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களை துப்பாக்கி முனையில் ஒன்றாக நிற்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் "ஏன் அவர்களை சுடவில்லை. எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு"? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக இருந்தனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும் விடுதலை செய்தார்கள். மறைசாட்சியாக கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

**குழுத்தலைமையாக்கப்பட்ட பணி.ஜோசப் கலாசன்ஸ் :**

மறைசாட்சிகளான இவர்களது குழுவிற்கு தலைமையாக்கப்பட்டவர் அருளாளர் கலாசன்ஸ். ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களை கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமை தந்தையாக பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பணி.ஜோசப் கலாசன்ஸ். பின்னாலில் யாருமின்றி அனாதையாக சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின்

பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே தன் கல்விச் செலவுகள், பிறகு கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தது. இங்கு தான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய் பதிந்த ஒன்றானது. செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளிடமிருந்து தன் முதல் துறவற ஆடையை பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்கு பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவர். தன் சலேசிய பணியோடு சேர்ந்து திருப்பணியையும் 20 ஆண்டுகள் திறம்பட செய்தவருக்கு 1916ல் க்யூபா நாட்டிற்கு சிறப்பு பணிக்காக அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமை தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன்பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்கு திரும்ப பெறப்பட்டு, தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமை தந்தையாக பணியாற்றினார்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி.ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்கு கொண்டு சென்றார்கள். பணி. ஜோசப் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியை பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன். இவனை கொல்ல வேண்டும்" என்றான். இதற்கு முன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் சொல்லியிருந்தார் பணி. ஜோசப் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுகட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்கு கொண்டு சென்றார்கள். வழியிலேயே ஒருவன் பணி. ஜோசப் கலாசன்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே." என்றபடியே பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார். கிறிஸ்துவின் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தனது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருளாளர்.ஜோசப் கலாசன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடு நினைவு கூறுகிறார்கள். திருஅவை பணி. ஜோசப் கலாசன்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.

# திருஅவைச் செய்திகள்

திரு. சாண்டோ

## இன்றைய சூழலில் யூபிலி என்பது நம்பிக்கையின் பாதையாக உள்ளது

இன்றைய சூழலில் யூபிலி என்பது நம்பிக்கையின் பாதையாக உள்ளது என்றார் நற்செய்தி அறிவிப்புக்கான திருப்பீடத்துறையின் இணைத் தலைவர் பேராயர் ரீனோ பிசிக்கெல்லா. இத்தாலியின் ரிமினியில் இடம்பெறும், "மக்கள் மத்தியில் நட்புறவை வளர்த்தல்" என்ற 45வது கூட்டத்தில் உரையாற்றிய பேராயர் பிசிக்கெல்லா அவர்கள், யூபிலி ஆண்டு தொடர்பில் நம்பிக்கையின் உயர் மதிப்பீடு குறித்தும் இறைமன்னிப்பின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். நம்பிக்கை நம்மை ஏமாற்றாது என்ற வார்த்தைகளுடன் திருத்தந்தை 2025ஆம் ஆண்டு யூபிலியை அறிவித்துள்ளதை சுட்டிக்காட்டிய, இந்த யூபிலி ஆண்டு நிகழ்வுகளுக்குப் பொறுப்பான பேராயர் பிசிக்கெல்லா அவர்கள், நம்பிக்கையின்றி நம் வாழ்வின் அடிப்படைகளை ஒரு நாளும் புரிந்துகொள்ள முடியாது எனவும் எடுத்துரைத்தார். நாம் நம் வாழ்வில் மற்றவர்களுக்கு வழங்குபவர்களாகவும், பங்கேற்பவர்களாகவும், ஒன்றிப்பின் அடையாளமாக செயல்படுபவர்களாகவும், நம்பிக்கையின் உறுதியான அடையாளங்களாகவும் இருப்பதை நம்பிக்கை எதிர்பார்க்கிறது எனவும் இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார் பேராயர்.

## உண்மையும் நீதியும் வெல்ல வேண்டும் - திருத்தந்தை

முரண்பட்ட ஆற்றல்கள், கடினமான முள் போன்ற சூழல்கள் இருந்தாலும் உண்மையும் நீதியும் வெல்ல வேண்டும் என்றும், கடவுள் மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றமடையாது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். போர் எப்போதும் தோல்விதான், அது அரசியல் தோல்வி, மனிதகுலத்தின் தோல்வி என்றும் கூறினார் திருத்தந்தை. லெபனோனில் இருக்கும் கேதுரு மரத்தின் மாண்பு மற்றும் மேன்மையைப்போல, நம்பிக்கையின் மாண்பு, உன்னதமான எதிர்நோக்கு அம்மக்களிடம் இருப்பதைக் காண்கின்றேன் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், கேதுரு மரங்கள் நம்மை விண்ணகத்தை நோக்கிப் பார்க்க அழைப்பு விடுக்கின்றன என்றும், கடவுள்மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒருபோதும் ஏமாற்றமடையாது என்றும் கூறினார் திருத்தந்தை.

## திருநற்கருணையினால் அன்பின் மறைப்பணியாளர்களாக மாறுகின்றோம்

திருநற்கருணையில் இருக்கும் இயேசுவை ஒருமுறை சந்தித்து, நம் கைகளால் தொட்டுணர்ந்து, அவரைப் பெற்றுக்கொண்டோமானால், அவரோடு இணைந்திருப்போம். பிறருடன் பகிர்ந்து அவரது அன்பின் மறைப்பணியாளர்களாக நாம் மாறுகின்றோம் என்று குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். மடகஸ்காரில் நடைபெற உள்ள தேசிய நற்கருணை மாநாட்டை முன்னிட்டு Morondava மறைமாவட்ட ஆயரும்,

மடகஸ்கார் ஆயர் பேரவையின் தலைவருமான ஆயர் Marie Fabien Raharilamboniaina விற்கு ஆகஸ்ட் 24 சனிக்கிழமை அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஒருங்கிணைந்த ஆயர் பேரவையின் முடிவில் நடைபெறும் இந்த தேசிய நற்கருணை மாநாடானது, திருநற்கருணையில் இருக்கும் இயேசுவை சந்தித்தல், அவரிடம் செபித்தல், நம்மைக் கையளித்து அவரைப் பின்பற்றுதல் போன்றவற்றை மீண்டும் கண்டறிய இம்மாநாடு உதவட்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். சோதனைகளை அனுபவித்து துன்புறும் மக்கள், தங்களது வாழ்க்கைப்பாதை மிகவும் கடினமானது, மகிழ்ச்சியைத் தராது என்ற எண்ணத்துடன், வருங்காலத்தை சந்தேகம் மற்றும் அவநம்பிக்கையுடன் பார்க்கும் மக்களாக மாறி விடுகின்றனர் என்றும், அத்தகைய மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டி கடவுளுடைய இரக்கத்திற்கும், இரக்கமுள்ள அன்பிற்கும் சாட்சிகளாக இருங்கள் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒவ்வொரு மனிதரின் மாண்பையும் காக்கவேண்டும்

மனிதராக இருப்பதன் அர்த்தம் என்ன என்பது பற்றிய தற்கால கேள்விகளின் பார்வையில் அனைத்துக் கிறிஸ்தவர்களும் அவர்கள் எந்தத் திருச்சபையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், ஒவ்வொரு மனிதரின் உள்ளார்ந்த மாண்பை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் திருத்தந்தை பிரான்சிஸ். மனித அடையாளம், உலகம் மற்றும் சமூகத்தில் மனிதரின் பங்கு மற்றும் ஒவ்வொரு மனிதரின் ஆழ்நிலைத் தொழில் பற்றிய மறுபரிசீலனை ஆகியவற்றைக் குறித்துப் பேசியுள்ளார். செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி மற்றும் அறிவியலில் அசாத்தியமான முன்னேற்றங்கள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப புரட்சியால் இத்தகைய கேள்விகள் உந்தப்பட்டு வருகின்றன என்றும் தனது செய்தியில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் திருத்தந்தை. ஒரு "மானுடவியல் புரட்சி" இந்த மானுடவியல் புரட்சியின் எதார்த்தம் என்பது, ஆழமான பிரதிபலிப்பு, சிந்தனையை புதுப்பிக்கும் திறன் மற்றும் செய்ய வேண்டிய தேர்வுகள் என்று கூறியுள்ளார் திருத்தந்தை. "மனிதர் என்பதன் அர்த்தம் என்ன" என்ற மையக்கருத்தில் நிகழும் இவ்வாண்டு கருத்தரங்கின் ஏற்பாட்டாளர்களை வாழ்த்துவதாகக் கூறியுள்ள திருத்தந்தை, இதுவொரு சவால் என்றும், இது அனைத்து கிறிஸ்தவர்களையும் அவர்கள் எந்தத் திருச்சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் பாதிக்கிறது என்றும், மானுடவியல் பிறழ்வு காலத்தில், கத்தோலிக்கர்களும் ஆர்த்தடாக்ஸ் சபையினரும், இந்தப் சிந்தனையை ஒன்றாக ஊக்குவிப்பதை பார்ப்பது மிகவும் ஆர்வமிக்கதாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மனித மாண்பை உறுதிப்படுத்துகிறது : எந்தத் திருச்சபையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள் மனித மாண்பைக் காப்பதில்

மீன்றும் உறுதியேற்க வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ள திருத்தந்தை, இத்தாலிய நகரமான திரானியின் 11 ஆம் நூற்றாண்டின் பாதுகாவலர் புனித நிக்கோலா பெல்லெக்ரினோவின் பரிந்துரையின் வழியாகவும், தனது இறைவேண்டல் வழியாகவும் இம்மாநாட்டின் பங்கேற்பாளர்களுடன் தானும் ஒன்றித்திருப்பதாகக் கூறி தனது செய்தியை நிறைவு செத்துள்ளார்.

## சுடர் வாசகர் போட்டி - 113 சரியான விடைகள்

1. அயர்லாந்தின் பேராயர் மைக்கேல் பிரான்சிஸ் குரோட்டி
2. தனது 19வது வயதில்
3. புனித பொனவெந்தூர்
4. 77
5. ஐந்தாம் பத்திநாதர்
6. புனித மாக்ஸி மில்லியன் கோல்பே
7. தூய்மை
8. இலாத்ரன் பேராலயம், புனித பேதுரு பேராலயம், புனித பவுல் பேராலயம், புனித லாரன்ஸ் பேராலயம், புனித பெரிய நாயகி பேராலயம்
9. துறவிகள்
10. அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி
11. தனது 30வது வயதில்
12. அன்னை ஆண்டவரில் ஆனந்தம் கொள்கிறாள்
13. வெள்ளை நிற கிரீடம் புனிதமாக வாழ, சிவப்பு நிற கிரீடம் மறைசாட்சியாக மரிக்க.
14. பேதுரு, யாக்கோபு, யோவான்
15. எசுக்குயிலின் மலையில்

## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Sr. Fatima F.M.A, Vellore
Mr. L. Ananth, Thanjavur
Mrs. Flora Josephine, Tirupur

## சுடர் வாசகர் போட்டி - 114

1. புனித பியோ இறந்ததும் ஐந்து காயங்கள் என்னவானது?
2. திருத்தந்தை பிரான்சிஸ், மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டி எவ்வாறு இருக்க வேண்டுமென்று கூறினார்?
3. புனித எரோனிமுஸ் திருவிவிலியத்தை எந்த மொழியிலிருந்து எந்த மொழிக்கு மொழி பெயர்த்தார்?
4. புனித பியோவின் பெற்றோர் யார்?
5. திருஅவையின் சட்ட வல்லுநர்களுக்கு பாதுகாவலர் யார்?
6. விலையுயர்ந்த ஆடை அணிந்து கல்வாரிக்குள் நுழைய முயன்ற அரசர் யார்?
7. "வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, பிறர் மனதில் நீ வாழும் வரை" கூறியது யார்?
8. ஆசிரியர்களின் பாதுகாவலர் யார்?
9. புனித அன்னை தெரேசாவின் சபை சுமார் எத்தனை நாடுகளில் உள்ளது?
10. "வின்சென்டிரியர்கள்" என்பவர்கள் யார்?
11. "யாவேயின் பரிசு" என்னும் கிரேக்க வார்த்தைக்கு என்ன பெயர்?
12. தன்னை "துன்புரும் ஊழியன்" என்று கூறிக்கொள்ளும் இறைவாக்கினர் யார்?
13. இயேசுவின் சிலுவையை கண்டுபிடித்தவர் யார்?
14. "மரியின் மாண்பு" நூலை எழுதியது யார்?
15. அன்பின் பணியாளர் சபையை தொடங்கியவர் யார்?


## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ.100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தீபகம்
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்: ................................
முகவரி: ................................
................................
................................
................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

குழந்தை இயேசுவின் புனித தெரேசா விழா
அரு. ஆல்பர்டோ மர்வெல்லி
பொதுக்காலம் 27ம் ஞாயிறு
புனித செபமாலை அன்னை
புனித 23ம் ஜான்
பொதுக்காலம் 28ம் ஞாயிறு (அரு.அலெக்ஸானிரினா மரியா)
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
புனித லூக்கா நற்செய்தியாளர்
பொதுக்காலம் 29ம் ஞாயிறு
2ம் ஜான்பால்
புனித லுயிஜி குவனல்லா
பொதுக்காலம் 30ம் ஞாயிறு
புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள்
புனித மைக்கெல் ரூவா

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

புனித லூக்கா, சீமோன், யூதா குறிப்பு அறிவோம்
யார் இந்த செபமாலை அன்னை?
அரு.அலெக்ஸான்ரினா மரியா வாழ்வின் பாடம் அறிவோம்
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | **ஞா** | **பொதுக்காலம் 22ம் ஞாயிறு** | I. இ.ச. 4: 1-2,6-8<br>II. யாக். 1: 17-18,21-22, 27 | மாற்கு 7:1-8,14-15, 21-23 |
| 2 | தி | | 1கொரி. 2: 1-5 | லூக். 4: 16-30 |
| 3 | செ | புனித பெரிய கிரகோரி | 1கொரி. 2: 10-16 | லூக். 4: 31-37 |
| 4 | பு | | 1கொரி. 3: 1-9 | லூக். 4: 38-44 |
| 5 | வி | கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா | 1கொரி. 3: 18-23 | லூக். 5: 1-11 |
| 6 | வெ | | 1கொரி. 4: 1-5 | லூக். 5: 33-39 |
| 7 | ச | | 1கொரி. 4: 6-15 | லூக். 6: 1-5 |
| 8 | **ஞா** | **பொதுக்காலம் 23ம் ஞாயிறு** | I. 1எசா. 35: 4-7<br>II. யாக். 2: 1-5 | மாற்கு 7: 31-37 |
| 9 | தி | புனித பீட்டர் கிளாவர் | 1கொரி. 5: 1-8 | லூக். 6: 6-11 |
| 10 | செ | புனிதர்கள் போன்சியான், இப்போலித்துஸ் | 1கொரி. 6: 1-11 | லூக். 6: 12-19 |
| 11 | பு | புனித மாக்சிமிலியன் மரிய கோல்பே | 1கொரி. 7: 25-31 | லூக். 6: 20-26 |
| 12 | வி | புனித மரியாவின் தூய்மைமிகு பெயர் | 1கொரி. 8: 1-7, 11-13 | லூக். 6: 27-38 |
| 13 | வெ | புனித ஜான் கிறிசோஸ்தோம் | 1கொரி. 9: 16-19, 22-27 | லூக். 6: 39-42 |
| 14 | ச | **திருச்சிலுவையின் மாட்சி விழா** | I. எண். 21: 4-9<br>II. பிலிப். 2: 6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | **ஞா** | **பொதுக்காலம் 24ம் ஞாயிறு** | I. எசா. 50: 5-9<br>II. யாக். 2: 14-18 | மாற்கு 8: 27-35 |
| 16 | தி | புனிதர்கள் கொர்னேலியுஸ், சிப்பிரியன் | 1கொரி. 11: 17-26 | லூக். 7: 1-10 |
| 17 | செ | புனித இராபெர்ட் பெல்லார்மின் | 1கொரி. 12: 12-14. 27-31 | லூக். 7: 11-17 |
| 18 | பு | | 1கொரி. 12: 31-13:13 | லூக். 7: 31-35 |
| 19 | வி | புனித ஜனுவாரியுஸ் | 1கொரி. 15: 1-11 | லூக். 7: 36-50 |
| 20 | வெ | புனிதர்கள் ஆன்ட்ரு கிம் தே கோன், பால் சோங் காசாங்சும் தோழர்களும் | 1கொரி. 15: 12-20 | லூக். 8: 1-3 |
| 21 | ச | புனித மத்தியா: திருத்தூதர் நற்செய்தியாளர் விழா | எபே. 4: 1-7, 11-13 | மத். 9: 9-13 |
| 22 | **ஞா** | **பொதுக்காலம் 25ம் ஞாயிறு** | I. சா.ஞா. 2: 17-20<br>II. யாக். 3: 16-4: 3 | மாற்கு 9: 30-37 |
| 23 | தி | பியத்ரெல்சினா நகர்ப் புனித பியோ | நீ.மொ. 3: 27-35 | லூக். 8: 16-18 |
| 24 | செ | | நீ.மொ. 21: 1-6, 10-13 | லூக். 8: 19-21 |
| 25 | பு | | நீ.மொ. 30: 5-9 | லூக். 9: 1-6 |
| 26 | வி | புனித கோஸ்மாஸ், தமியான், மறைச்சாட்சியர் | ச.உ. 1: 2-11 | லூக். 9: 7-9 |
| 27 | வெ | புனித வின்செனட் தெ பால் | ச.உ. 3: 1-11 | லூக். 9: 18-22 |
| 28 | ச | புனித வென்செஸ்லாஸ், லாரன்ஸ் ரூய்சும் | ச.உ. 11: 9-12: 8 | லூக். 9: 43-45 |
| 29 | **ஞா** | **பொதுக்காலம் 26ம் ஞாயிறு** | I. எண். 11: 25-29<br>II. யாக். 5: 1-6 | மாற்கு 9: 38-48 |
| 30 | தி | புனித ஜெரோம் | யோபு. 1: 6-22 | லூக். 9: 46-50 |



TO SHARE THE LIGHT

யூபிலி 2025
எதிர்நோக்கின் திருப்பயணிகள்

# மாபெரும் யூபிலி 2025

திருத்தந்தை அறிவிப்பை முன்னிட்டு

## பொதுநிலையினருக்கான இரண்டாம் வத்திக்கான் சங்க பயிற்சி பாசறை

| | | |
|---|---|---|
| இடம் | : | தீபகம், சென்னை சலேசிய மாநில இல்லம்<br>டெய்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-10 |
| மாதம் மற்றும் நாள் | : | அக்டோபர், நவம்பர் 2024, ஜனவரி 2025, பிப்ரவரி<br>மூன்றாம் ஞாயிற்றுக்கிழமைகள் |
| நேரம் | : | பிற்பகல் 3.30 மணி முதல் 7.00 மணி வரை |

தலைப்புகள் :

| | | |
|---|---|---|
| முதல் நாள் | : | இரண்டாம் வத்திக்கான சங்கம் - ஓர் அறிமுகம்,<br>சங்கம் தந்த புதிய பார்வை |
| இரண்டாம் நாள் | : | திருஅவை ஏடு, பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி |
| மூன்றாம் நாள் | : | திருவழிபாடு, இறைவெளிப்பாடு |
| நான்காம் நாள் | : | இன்றைய உலகில் திருஅவை, பல்சமய உரையாடல் |

**பங்கேற்பாளர்கள் நான்கு நாட்கள் பயிற்சியிலும் முழுமையாக பங்கேற்க வேண்டும்**

வழிநடத்துபவர்கள் :

- திரு. **மரிய மைக்கேல்,** பள்ளிக்கரணை
- திரு. **டோனி,** அம்பத்தூர்
- திரு. **மரிய மைக்கேல் ராஜ்,** பம்மல்
- திருமதி. **பரிமளம் பீட்டர்,** தாம்பரம்

தொடர்புக்கு :

அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

பதிவுக் கட்டணம்
**ரூ.100/-**

புனித தேவசகாயம் பொதுநிலையினர் இயக்கம், சென்னை
அக்கம் பக்கம் மக்கள் மன்றம், செங்கல்பட்டு

TO SHARE THE LIGHT

## தீபகம் தயாரிப்பு

# திருவிவிலிய கண்காட்சி



பங்கு மக்களும், மாணவ மாணவியரும் திருவிவிலியத்தைப் பற்றி எளிதாக அறிந்துக் கொள்ள விவிலிய நிகழ்ச்சிகளை படங்களாகவும், செய்திகளாகவும், விளையாட்டுகளாகவும், வீடியோ காட்சிகள், பொம்மலாட்டம் வழியாகவும், எடுத்தியம்பும் சிறந்த கண்காட்சி.

இந்த கண்காட்சியை பங்குகளிலும், பள்ளிகளிலும் அமைத்து விவிலிய அறிவையும் விசுவாசத்தையும் வளர்க்க உதவிடுவோம்.

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 **Deepagam Don Bosco**

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *அட்டைப்பட வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** கீழ்ப்பாக்கம், சென்னை - 10